[illegible]

V2 No 4

[illegible] 1929

JL
R673 M24, N128
N29'2.4/
187130

568

d No. M. 2330.

" SIDDHANTHAM"
Vol. 2—No. 4.

ஓம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே"

27 APR 1929
MADRAS

| | | |
|---|---|---|
| மலர் ௨ | சுக்கில ஆண்டு சித்திரைத் திங்கள்<br>1929 ௵ ஏப்ரல் ௴ | இதழ் ௪ |

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| சுயமரியாதைச் சம்பாஷணை ... ... | 77 |
| மௌனத்தில் சிந்திக்கத் தகுந்த கருத்துகள் ... | 82 |
| குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை ... | 83 |
| சமய இயக்கம் ... ... ... | 88 |
| நம்மவர்கள் புராணங்களை எம்மட்டில் நம்புவது? ... | 91 |
| சைவப் பெரியார் தனிக்கூட்டம் ... ... | 93 |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—வல்லை. பாலசுப்பிரமணியன், B. A.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

1929

சிவமயம்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்.

# தேவாரம் குறைந்த விலைக்கு வெளியிடல்

நம் சமாஜத்தின் முக்கிய நோக்கங்களுள் பன்னிரு திருமுறைகளைக் குறைந்த விலைக்கு அச்சிட்டு வெளியிடலும் ஒன்று. பொருளுதவியின்மையால் இதுகாறும் இந்நோக்கம் முற்றுப்பெறவில்லை. இக்குறையை நீக்க, நம் சமாஜத்துக் காரிய நிர்வாக சபையினருள் ஒருவரும், சென்னை ருக்மணி குக்கர் கம்பெனி சொந்தக்காரரும், சைவப் பெரியாருமாகிய திருவாளர் அ. சோமசுந்தரம் செட்டியார், M. A., அவர்கள் முன்வந்துள்ளார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் 10,000 பிரதிகள் அச்சிடுவதற்காக ரூ. 250 முன் பணமாகத் தர இக்கொடையாளர் வாக்களித்துள்ளார். நானும் ரூ. 250 முன்பணமாகத் தருவேன். சிவபுண்ணிய சீலர்கள் பலர் இங்ஙனமே முன்வந்தால் பன்னிரு திருமுறைகளையும் பன்னிரு மாதங்கட்குள் அச்சிட்டு வழங்கிவிடலாம். 10 ரூபா முன்பணமாகத் தருவோர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் 50 பிரதிகள் பெறுவர். புத்தகம் அச்சிட்டு முடிந்தபின் பிரதி ஒன்றின் விலை அணா 4 ஆகும்.

இதைக்கண்ணுறும் ஒவ்வொருவரும் இயன்ற பொருளுதவி புரிவதோடு தங்கட்குத் தெரிந்த கொடையாளர்களை யடுத்து இப்பணிக்கு உதவும்படி செய்து உபகரிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம் :

**ம. பாலசுப்ரஹ்மண்யம்,** காரியதரிசி,

150, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை.

குறிப்பு:—இவ்விஷயத்தைப்பற்றித் தீர்மானிப்பதற்கும், விதிகளிற் சில மாறுதல்கள் செய்வதற்கும் சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று 1929ஆு ஏப்ரல்மீ 22உ மாலை 6-மணிக்கு, சென்னை, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, 150-வது எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்.

# பரிசளிப்பு அறிக்கை

“அறுபத்து மூன்று நாயன்மார் சரித்திர உண்மை” என்பதுபற்றி ஆங்கிலத்திலாவது தமிழிலாவது கடிதத்தில் ஒரு பக்கத்தில் எழுதப்பட்டு, கல்வெட்டு, சரித்திரம் முதலிய கிடைக்கக்கூடிய சான்றுகளையெல்லாம் தழுவி எழுதப்படும் சிறந்த கட்டுரைக்குத் திருப்பாதிரிப்புலியூர் உயர்திரு ஞானியார் சுவாமிகள் மூலமாக, தர்மபூஷணம் திவான்பகதூர் தீ. நா. முத்தையா செட்டியார் அவர்கள் F. R. S. A., M. L. C. ரூபாய் 100 பரிசு அளிப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். கட்டுரைகள் 1929ஆு மேமீ 10உக்குள் “காரியதரிசி சைவ சித்தாந்த மகாசமாஜம், 150, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை” என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். பரிசு 20-5-29-இல் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் அளிக்கப்படும்.

இங்ஙனம் :

**ம. பாலசுப்ரஹ்மண்யம்,** காரியதரிசி.

17 APR 1929

ஓம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "

மலர் உ | விபவ ஆண்டு சித்திரைத் திங்கள் 1929 ஷ் எப்ரல்மீ | இதழ் ச

## சுயமரியாதைச் சம்பாஷணை

[பத்திராசிரியர்]

அழகப்பன், முருகப்பன்—என்ற இரண்டு நண்பர்கள் ஒருநாள் சாயங்காலம் சென்னைக் கடற்கரையில் உட்கார்ந்துகொண்டு பேசியதின் சுருக்கம் பின்வருமாறு :—

முருகப்பன்—அழகா, நேற்று நீ செங்கல்பட்டு சுயமரியாதை மகாநாட்டுக்கு வராமற் போனாயே, ஆ! ஆ! என்ன கூட்டம், என்ன வேடிக்கை, என்ன பேச்சு, என்ன அருமையான தீர்மானங்கள் !

அழகப்பன்—என்ன, என்ன விவரமாய்ச் சொல், கேட்போம்.

மு—நேற்று இரவிலிருந்து நான் திருநீறு அணிவதை விட்டுவிட்டேன். நீ அதை கவனித்தாயா ?

அ—ஏன் உன் வீட்டில் திருநீறு ஆய்விட்டதா ? பழநியிலிருந்து நல்ல வாசனை விபூதி வந்திருக்கிறது. ஒரு படி தருகிறேன், வேண்டுமா ?

மு—நீயே வைத்துக்கொள். நாங்களெல்லாம் கைதூக்கி, திருநீறு, நாமம், சந்தனம் முதலியவைகள் ஒன்றும் நெற்றியில் அணியக்கூடாது என்று தீர்மானித்து விட்டோம்.

அ—ஏன், ஆபீசுக்குப் போகும் அவசரத்தில் இதற்காகத் தாமதமாய் விடும் என்று இப்படிச் செய்தீர்களா ?

மு—இல்லை, இல்லை. இவைகளை நெற்றியில் அணிவதினால் சமயப் பிணக்கு உண்டாகிறதே தவிர நன்மை ஒன்றையும் காணோமே. மேலும் ஏதோ இவைகளில் தத்துவார்த்தங்களெல்லாம் சொல்லுகிறார்களே அவைகளில் எனக்கு அணுவளவும் நம்பிக்கையில்லை.

அ—நெற்றியில் திருநீறிட்டால் சமயப் பிணக்கு எப்படி வரும். எனக்குத் தெரியவில்லையே ?

மு—என்ன! நீ காஞ்சீபுரம் வரதராஜ ஸ்வாமி கருட சேவைக்குப் போனதில்லையோ? அங்கே அப்போதுபார்த்தால் தெரியும் வேடிக்கை. வடகலை தென்கலை இரண்டும் விஷ்ணு மதம் தானே, அதற்குள் எவ்வளவு சண்டை தெரியுமா ?

அ—என்ன சண்டை, சொல் கேட்போம்.

மு—ஏதோ, சில பாட்டுக்களை முதலில் யார் பாடுவது என்று பலமாகச் சண்டை. முதலில் பாடுவதில் ஏதோ ஓர் உயர்வு இருக்கிறதாம். மேலும் முதலில் பாடுகிறவர்களுக்கு முதலில் மாலை மரியாதைகளெல்லாம் நடக்கிறதாம். இதற்காகத்தான் சண்டை.

அ—நீ சொல்வதிலிருந்து நாம வேறுபாட்டினால் சண்டை வருவதாக இல்லையே? ஏதோ உயர்வு, மாலை மரியாதைக்காகத்தானே சண்டை செய்கிறார்கள்.

மு—என்ன இப்படிச் சொல்லுகிறாய். தென்கலை வடகலை என்ற இரண்டு பிரிவுகளில்லாவிட்டால் எல்லாரும் ஒரு கலையாய் ஒத்த மனதோடு சண்டையின்றிப் பாடலாம் அல்லவா ?

அ—எல்லாரும் ஒருகலை நாமமே அணிந்தாலும், யார் முதலில் பாடுவது, மாலை மரியாதை பெறுவது என்று சண்டை செய்ய மாட்டார்களா? நாம வேறுபாட்டினால் இந்தச் சாக்கை வைத்துச் சண்டை செய்கிறார்கள். இல்லாவிட்டால் வேறு சாக்கை வைத்துச் சண்டை செய்வதற்கு

மு—ஆகையால் இந்த நாம வேறுபாட்டினால் சண்டைக்கு ஒரு சாக்கு ஏற்படுகிறது என்று நீ ஒப்புக்கொள்ளுகிறாயல்லவா ? அதைத்தானே நானும் சொல்லுகிறேன்.

அ—ஒரு சாக்கு ஒழிந்தால் சண்டை ஒழியுமா? சண்டையை ஒழிப்பது உன் நோக்கமா, அதன் சாக்குகளில் ஒன்றை மட்டும் ஒழிப்பது உன் நோக்கமா ?

மு—சண்டையை ஒழிப்பதுதான் நோக்கம். கூடியவரையில் இந்த சாக்குகளையெல்லாம் ஒழித்துவிட்டால் சண்டை தானே ஒழிந்துவிடுமல்லவா? இதென்ன இவ்வளவுகூட தெரியாமல் பேசுகிறாய்.

அ—உனக்கு இந்தச் சண்டையின் தன்மை விளங்கவில்லை. எனக்கு எத்தனையோ நன்றாய்ப் படித்த ஐயங்கார் சிநேகிதர்கள் வடகலையிலும் தென்கலையிலும் இருக்கிறார்கள். அவர்கள் எந்த வகையிலும் வித்தியாசமில்லாமல் ஒற்றுமையாகவே இருக்கிறார்கள். அவர்கள் ஏன் சண்டையிடுவதில்லை ?

மு—அவர்களெல்லாம் படித்தவர்கள். மேலும் அவர்கள் மாலை மரியாதை முதலிய விஷயங்களில் ஈடுபடுவதில்லை. அதனால் சண்டை வருவதில்லை.

அ—நன்றாகத் தான் சொன்னாய். உண்மையான படிப்பும், ஒழுக்கமும் உடையவர்களுக்குள் சமயச் சண்டை ஏற்படாது. சமயத்துக்கும் மாலை மரியாதை உரிமைக்கும் என்ன சம்பந்தம் என்று கவனித்துப் பார். கோயில்களில் ஏதோ சில பணிவிடைகள் செய்வதற்குச் சில மரியாதைகளும் வருவாயும் பண்டைக் காலத்



தில் ஏற்பட்டன. அக்காலத்தில் பணிவிடை செய்தவர்கள் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மிகச் சிறந்தவர்களாக இருந்தார்கள். அக்காலத்து மன்னர்களும் சீமான்களும் அவர்கள் கல்வி அறிவு ஒழுக்கங்கட்கு மெச்சி அளவிறந்த வருவாய், மரியாதை முதலியன ஏற்படுத்தி விட்டார்கள். ஒழுக்கச் சீலர்களாக இருந்த பணியாளர்களும் வருவாயையும் மரியாதையையும் மிகைபடக் கொள்ளாது இறுமாப்பெய்தாது பரோபகாரமாகவே செலவு செய்தனர். பின்னர் அவர்கள் வழி வந்தவர்கள் செல்வ மிகுதியால் கல்வி அறிவு ஒழுக்கங்கள் குன்றி, வருவாய், மரியாதை, இறுமாப்பு முதலியவைகளிலேயே நோக்கமுடையவர்களானார்கள்.

மு—அவர்களேன் அப்படி ஆனார்கள் ?

அ—செல்வ மிகுதியால் முயற்சிக் குறைவும், முயற்சிக் குறைவால் கல்விக்குறைவும், கல்வியின் குறைவால் அறிவு ஒழுக்கக் குறைவுகளும் வரும் என்பதை நீ அறிவாய் அன்றோ.

மு—ஆனால் கல்வி அறிவு ஒழுக்கங்கள் குறைந்தவர்களை ஏன் அப்பணிவிடைகட்கு வைத்துக் கொண்டார்கள்.

அ—இதில்தான் மனித சுபாவம் விளங்குகிறது. கல்வி அறிவு ஒழுக்கங்கள் குறைந்த காலத்துங்கூட செல்வ மிகுதியால் ஆலய அதிகாரிகட்கும் நீதி அதிகாரிகட்கும் உதவிகள் செய்து பணிவிடை உத்தியோகத்தில் தாங்கள் நிலைக்கும்படிசெய்து கொண்டார்கள். பிறகு நீண்ட பழக்கத்தினால் வம்ச வழியுரிமை என்ற சட்டமும் ஏற்பட்டுவிட்டது.

மு—ஆனால் அந்தச் சட்டத்தை மாற்ற முடியாதோ ?

அ—ஏன் முடியாது ? தேவதாசிகளைப்பற்றிய மட்டில் மாற்றி விடவில்லையா ? அதைப்போலவே செய்யலாம்.

மு—ஆகையால் நீ சொல்வது கல்வி அறிவு ஒழுக்கங்கள் உள்ளவர்களிடம் சமயப் பிணக்கு கிடையாது என்பது. இது உண்மைக்கு மாறாகவல்லவோ இருக்கிறது.

அ—ஏன் அப்படிச் சொல்லுகிறாய் ?

மு—நன்றாக ஆலோசித்துப் பார். கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்கள் தானே மெய்கண்ட தேவர், சங்கராசாரியார், இராமானுஜர், மத்வர், பாஸ்கரர், நீலகண்ட சிவாசாரியார், வேதாந்த தேசிகர் முதலிய பெரியார்கள் ?

அ—ஆம், அவர்கள் என்ன செய்தார்கள் ?

மு—அவர்கள் கடவுள், உயிர், உலகம் என்ற மூன்று பொருள்களின் தன்மையையும் அவைகட்குள்ள தொடர்பையும் பற்றிக் கூறிய மாறுபட்ட கருத்துக்கள் தானே அளவில்லாத சமயப் போருக்கும் பிணக்குக்கும் காரணமாக இருக்கின்றன.

அ—இதோ, கடல் நிறத்தைப் பார். நான் இதன் நீல நிறம் மயிலின் நீல நிறத்தைப் போல் இருக்கிறது என்கிறேன். நீ என்ன சொல்லுகிறாய் ?

மு—இது ஆகாயத்தின் நீல நிறத்தைப்போலிருக்கிறது என்கிறேன்.

அ—இவ்வளவு தானே, நமக்குள் கருத்து வித்தியாசம் இருக்கிறதே, நாம் அடித்துக் கொள்ளுகிறோமா, திட்டிக் கொள்ளுகிறோமா?

மு—இல்லை, கருத்து வேற்றுமையினால் அடி திட்டு ஏன் வரவேண்டும்?

அ—இதைத் தான் உன் வாயிலிருந்து வெளிப்படுத்த எண்ணினேன். கடவுளுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பை இப்பெரியார்கள் பல உதாரணங்கள் மூலமாக விளக்கினார்கள். அவரவர்கள் அறிவுக் கேற்ற உதாரணத்தைக் கொள்ளலாம். அதற்காக மற்றொரு கொள்கையுடையோரைத் திட்டவும் வேண்டாம், அடிக்கவும் வேண்டாம்.

மு—பிறகு ஏன் சமயத்துறையில் அடிதடி உண்டாகிறது?

அ—முன்னமே சொன்னேன் - கல்வி அறிவு ஒழுக்கக் குறைவினாலும் வருவாய், மரியாதை முதலியவைகளைப் பற்றிய உரிமை, இறுமாப்பு இவைகளாலும் தான் சண்டை வருகிறது.

மு—அதெல்லாம் போகட்டும், ஏன் திருநீறு அநாவசியமாக அணிந்து கொள்ளவேண்டும். எனக்கு அதில் நம்பிக்கை யில்லையே? காரண காரியங்களை அறியாத வரையில் நான் எதையும் நம்புவதில்லை.

அ—இதுவரையில் நான் உற்றுப் பார்க்கவில்லை. கையில் பொன் சங்கிலியில் ஏதோ ஒரு சிறிய உருவப் படத்தைக் கட்டித் தொங்க விட்டிருக்கின்றாயே. அது யாருடைய படம்?

மு—இதுதான் சுயமரியாதைத் தலைவர் படம். இந்தப் படத்தைப் பார்க்கும் போதெல்லாம் சுயமரியாதை ஞாபகம் வருகிறது.

அ—ஓ, ஓ, இது சுயமரியாதை ஞாபகச் சின்னமோ?

மு—ஆம் ஆம் நன்றாய்ச் சொன்னாய்.

அ—முருகப்பா, திருநீறும் அதைப் போலவே கடவுளுடைய அருள் தொழிலின் ஞாபகச்சின்னம்.

மு—அதென்ன எனக்கு விளங்கவில்லையே.

அ—உயிர்கள் மலங்களினால் நிலை பெற்ற இன்பம் அடையாமல் கஷ்டப்படுகின்றன. அம்மலங்களை ஞானச் சுடர் கொளுத்தி கடவுள் தம் அருளினால் போக்கி உயிர்களுக்குப் பேரின்பத்தைத் தருகிறார்.

அ—நீ சொல்வதைச் சரியென்று எப்படி நம்புவது?

அ—மிகவும் எளிய வழியில் சொல்லுகிறேன் கேள். மனிதனுக்கு இறுமாப்பு இன்பத்தைக் கொடுக்குமா?

மு—துன்பத்தைத்தான் தரும். இறுமாப்பு மனிதனுக்குக் கூடாது.

அ—தன்னுடைய சக்திக்கு அதிகப்பட்ட சக்தியின் முன்னிலையில் தானே அந்த இறுமாப்புப் போகும்?

மு—ஆம்; அல்லாவிட்டால் அது அதிகரிக்கும்.

அ—அறிவு வளர்ச்சியினால், இன்பத்துக்கு இறுமாப்பு இடையூறு செய்யும் என்ற உணர்ச்சியோடு, அவ்விறுமாப்பைப் போக்கவேண்டுமல்லவா?

மு—ஆம் ஆம்; நீ சொல்வது என் யுக்திக்குப் பொருத்தமாக இருக்கிறது.

அ—இறுமாப்பை மலமென்றும், பெரிய சக்தியைக் கடவுளென்றும், அறிவு வளர்ச்சியை ஞானச் சுடர் என்றும் வைத்துக்கொள். இன்னம் பற்பல நுட்பங்களிருக்கின்றன. அவைகளை யெல்லாம் மற்றொரு சமயம் விளக்குகிறேன்.

மு—பசுவின் சாணத்தினாலாகிய திருநீற்றுக்கும் கடவுள் அருட் செயலுக்கும் என்ன சம்பந்தம்?

அ—உயிர்களுக்குச் சாத்திர பரிபாஷையில் பசு என்று பெயர். உடம்பைப்பற்றிய வரையில், மலம் எப்படி எல்லா நோய்கட்கும் காரணமாய் அருவருக்கத்தக்கதாய், அது ஒழிந்த காலத்து சுகம் உண்டாகிற தன்மையுடையதா யிருக்கிறதோ அதைப் போலவே ஆத்மாவைப்பற்றிய வகையில் இறுமாப்பு என்ற மூலமலம் துன்பம் செய்கிறது.

மு—நீ சொல்வது என் மனதைக் கவர்கின்றது. மேலே சொல்.

அ—இம்மூல மலம் அறிவுக்குமுன் நில்லாதாகையால் இது மிருக சுபாவம் அல்லது விலங்குத் தன்மையேயாகும். விலங்குகளிற் சிறந்தது பசுமாடு. ஆகையால் பசுமாட்டின் சாணத்தை இம்மூல மலத்துக்கு ஒப்பிடலாம். அதைத் தீக்கொண்டு கொளுத்துவதை, மூலமலத்தை ஞானத் தீயினால் கொளுத்துவதற்கு ஒப்பிடலாம். கொளுத்திய பிறகு தோன்றுவது பரிசுத்தமான அருள்பிரகாசம். சாணத்தைக் கொளுத்திய பிறகு கிடைப்பது பரிசுத்தமும் வெண்மையும் ஒளியும் உடைய திருநீறு.

மு—நண்பனே, நன்றாய் உணர்ந்தேன். இவ்வளவு கருத்துக்களையும் உள்ளடக்கி 'மந்திரமாவது நீறு' என்று திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் கூறியது என் நினைவிற்கு வருகிறது.

அ—நானும் அதைத்தான் சொல்ல இருந்தேன். மூலமந்திரமாகிய பிரணவ பஞ்சாக்கரத்தின் தத்துவார்த்தத்தை விளக்குவது திருநீறு. அருள் வடிவான பராசக்தியின் உருவமாக விளங்குவதும் இதுவே. கோயிலில் சிவபெருமான் அருளைக் கொடுப்பதற்கு அறிகுறியாகத்தான் திருநீறு கொடுக்கிறார்கள்.

மு—நண்பனே! உன்கையால் விபூதி கொடு. சிவச்சின்னமாகிய திருநீற்றின் உண்மை யுணர்ந்தேன். வேற்றுமை யுணர்ச்சியினால் தான் சமயப் பிணக்கு வருகிறதே யொழிய சின்னங்களாலில்லை என்று ஐயந்திரிபறக் கண்டேன். நமஸ்காரம்.



---

**யோகாசனங்கள்:**—இவ்வரிய நூல் திரு. எம். ஆர். ஜம்புநாதன் அவர்களால் எழுதப் பட்டது. இதிற் குறித்துள்ள 46 ஆசனங்களைச் செவ்வனே பயின்றால் நோயற்ற வாழ்வாம் குறைவற்ற செல்வத்தைப் பெறுவதோடு உயிர் கலையும் பெறலாம். அரிய முறைகளைப் படங்கள் வாயிலாக அறிவுறுத்திய பெரியார்க்கு நமது நன்றியுரித்து. விலாசம்: சூடன் கம்பெனி, 14, பள்ளியப்பன் தெரு, சௌகார்ப்பேட்டை. விலை ரூ. ஒன்று.

# மௌனத்தில் சிந்திக்கத் தகுந்த கருத்துகள்

*A translation from the " Epoch " December 1928*

[N. இராமலிங்கம் பிள்ளை]

(1) வாழ்க்கையிலும், ஒழுக்கத்திலும் நன்னடக்கையைப் போல உத்தரவாதம் செய்வது பிறிதொன்றில்லை.

(2) அன்புள்ள அல்லது ஆத்ம தானச் செயலொன்றினைச் செய்ததற்கு நீ வருந்தாதே. அவைகள் எப்பொழுதும் சமாதானத்தைப் பயக்குகின்றன.

(3) நன்மை செய்ததன் பயனாக, நீ துன்பத்தை யனுபவிக்க மாட்டாய். தீமை செய்து ஆக்கத்தையாவது பாக்கியத்தையாவது அடைய முடியாது.

(4) தீமையுடன் இணக்கஞ் செய்யாதே. என்றும் மெய்யை நாடினால் உனக்கு எல்லாமினிதாய் முடியும்.

(5) சிறியதொரு அற்பக் காரியத்திலும் பிறனை ஏமாற்றாதே. உன்னிடத்தி லில்லாததை உளதாக நடிக்காதே. இக்கபடச் செயல் தொடர்ச்சியான துன்பங்களைச் சூழ்விக்கும்.

(6) வாய் திறவாமை, சைக்கினை, ஓர் அறிக்கை இவைகள் மூலமாய் வஞ்சித்தல், பொய் சொல்வதற்கொப்பாகும்.

(7) பொருள் குவித்தலிலேயே கருத்தூன்றியவன் இறுதியில் தன் ஆத்துமாவைக் குன்றிவிடச் செய்கிறான்.

(8) மற்றவர்களிற் குற்றங்காணாதே. குற்றங் கூறுதல் எப்பொழுதும் கூறுபவனுக்கு ஏதாமொரு துக்கத்தைப் பிரதி யுபகரிக்கிறது.

(9) தன்னையே யறிந்து நட. அயலாரை உற்று நோக்க வேண்டாம்.

(10) கடவுளுடைய அன்பு எங்கும் செறிந்திருக்கிற தென்பதை நாம் உணர்வோமானால் எத்தகைய பாக்கியவான்களா யிருப்போம்.

(11) உண்மை சிநேகிதனா யிருப்பது ஒரு பெரும் புண்ணியம். உன்னுடைய நண்பன் உன்னிடத்தே நம்பிக்கை வைக்கலாமா?

(12) மெய்யான நட்பு தெய்வத் தன்மையது. கடிதங்கள், வெகுமதிகள், சகாயங்களால் உண்டாவதன்று. ஆப்த சிநேகம் இவைகளால் ஆவதல்ல.

(13) பிறனொருவனுக்குச் செல்வம் வந்துழி நீ பெருமகிழ்வெய்த வேண்டும். உன் சிநேகிதனுடைய இன்பத்தில் களிகூர வேண்டும்.

(14) உயிருள்ள ஒவ்வொரு ஜீவப் பிராணியிடத்தும் உன்னுடைய இருதயத்திலே சாந்தம் இருக்கிறதோ வென்று கருதுக.

(15) நீ மிகுந்த செல்வவானா யிருக்கலாம். ஆனால் உன்னிதயத்தில் அன்பு, கருணை நிறையப்படா விட்டால் உண்மையாகவே நீ ஏழைதான்.

(16) உன்னுடைய மனமும் கொடுப்பதோடு ஈடுபடும் வரை ஈவதை நிறுத்தி வை.



(17) கைம்மாறு கிடைப்பதைக் கிஞ்சித்தும் எதிர்பார்த்துக் கொடாதே.

(18) நான் தியாகம் செய்தது என்னிதயத்தை இன்பப்படுத்திற்று. என் சொந்தத்திற்காகத் தெரிந்து வைக்கப்பட்டவை என்னைத் தனியே ஒதுக்கின.

(19) உலகத்தில் சமாதானம் பெருகும்படி என்றும் இன்றும் பிரார்த்தனை செய்.

(20) நான் எல்லாரிடத்திலும் அன்புள்ளவனா யிருக்கிறேன். ஒருவரையும் வெறுப்பதில்லை.

(21) அன்பு நிறைந்த வாழ்வே, பேரின்பமெய்திய வாழ்வு.

---

# குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை

[R. M. அண்ணாமலை செட்டியார்]

**மா**ணவன் :—சித்தாந்த சிகாமணியே! தாங்கள் இப்போது அவகாசமாக விருப்பதாகத் தெரிவதால் சில உண்மைகள் தெரிய விரும்புகின்றேன். அதாவது சுவர்க்கலோக மென்றும் நரகலோகமென்றும் வேறு உலகங்களிருப்பதாகச் சொல்லிக் கொள்கின்றார்களே! அஃதுண்மைதானா?

குரு :—ஆம். அதற்கென்ன சந்தேகம்.

மா :—அதற்கென்ன பிரமாணமிருக்கின்றது.

குரு:—ஒரு பொருள் உண்டா. இல்லையா வென்பதைத் தெரிந்து கொள்வதற்குக் காண்டல், கருதல், உரை யென்னும் மூன்றளவைகளிருக்கின்றன அல்லவா! அவற்றுள் நீ கேட்கிற சுவர்க்க லோக நரகலோகங்களை உரைப் பிரமாணத்தாலன்றி ஏனைய இரண்டு பிரமாணங்களாலும் அறிய முடியாதாகலின் அவை உண்டென்பதற்கு உரைப்பிரமாணம் காட்டுகின்றேன். கேட்பாயாக. " சுவர்க்கத் திருந்தனை நரகிற்கிடந்தனை இன்பமுந் துன்பமுமிந் நிலத்தருந்தினை " என்று முற்றத்துறந்த முனிவராகிய பட்டினத் தடிகளருளியது கொண்டும், " அடக்க மமரரு ளுய்க்கும், மடங்காமை யாரிரு ளுய்த்துவிடும், " என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாருளியது கொண்டும் சுவர்க்க லோகம் நரகலோகம் வேறுண்டென்பதைக் கண்டுகொள்வாயாக.

மா :—தாங்கள் மேற் கூறியவாறு சுவர்க்கலோகம் நரகலோகம் உண்டென்பதற்கு உரைப் பிரமாண மிருந்தாலும் எனது யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஒத்திருந்தா லன்றி அதனைப் பிரமாணமாகக் கொள்வதெப்படி?

குரு :—மடமை யானவனே, உரைப் பிரமாணம் யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஒத்திருக்க வேண்டுமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் நீயோ சிற்றறிவும் சிலநா ளநுபவமுமே வாய்க்கப் பெற்றவன். உரை செய்தவர்களோ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பெற்ற மெய்ஞ்ஞானிகள். அவர்கள் உன்னைவிட யுத்தியிலும் அநுபவத்திலும் சிறிதும் குறைந்தவர்களல்லர். அப்படியானால் உரையைப் பிரமாணமாகக் கொண்டு எதன்

பொருட்டு அவ்வாறு கூறப்பட்டதென்று உண்மை காண முயல்வதா, உன் சிற்றறிவிற்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை யானால் உரைப் பிரமாணத்தைத் தள்ளி விடுவதா?

மா :—அறியாது கூறினேன். பிழை பொறுத்தருளல் வேண்டும். உரையைப் பிரமாணமாகக் கொண்டேன். அதில் எனக்கு நிகழ்கின்ற ஐயத்தை நீக்கி உண்மையை யுணர்த்தக் கேட்டுக் கொள்கின்றேன்.

குரு :—உனக்குத் தோன்றுகின்ற ஐயம் யாது?

மா :—நம்மாற் செய்யப்படு மிதமகிதங்களின் பயனாகிய இன்ப துன்பங்களை இவ்வுலகத்திலேதான் அநுபவிக்கின்றோமே. அவ்வாறானால் வேறு சுவர்க்கலோக நரகலோகங்களெற்றுக்கு?

குரு :—ஆன்மாக்களாகிய நாமெல்லோரும் மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் செய்யும் நல்வினை தீவினைகட்கோரளவே கிடையாது. ஆகையினாலே அவ்வினைப் பயன்களை யநுபவித்துத் தீர்த்துத் தொலைத்தற்குத் தண்டனைகளும் அளவற்றிருக்கின்றன. அவற்றை யநுபவித்தற்கு இவ்வுடலும் இவ்வுலகமும் போதாதாகலின் சுவர்க்கலோகமும் நரகலோகமும் வேறமைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாகக் குடிகள் செய்த பாவங்கட்கெல்லாம் அரசனால் ஒரேவிதமான தண்டனை விதிக்கப்படவில்லையே. சில குற்றங்கள் இனிமேலிவ்வாறு செய்யக்கூடாதென எச்சரிக்கை செய்து விடப்படுகின்றன. இன்னும் சில குற்றங்கட்கு அபராதம் விதிக்கப்படுகின்றது. வேறு சில குற்றங்கட்கு சவுக்கடி கொடுக்கப்படுகின்றது. மற்றும் சில குற்றங்கட்கு தூக்குத் தண்டனை விதிக்கப் படுகின்றது. இவையெலாமன்றி வேறு சில குற்றங்கட்கு நாடு கடத்தப் படுவதையும் பார்க்கின்றோமல்லேமோ? அம்மாதிரியே ஆன்மாக்கள் தாம் செய்து கொண்ட வினைகளின் வன்மை மென்மைகட்கேற்ப இவ்வுலகத்திலேயே பலவாறு வினைப் பயன்களை யநுபவித்தலுண்டு. அன்றியும் இவ்வுடலைவிட்டுப் பிறிதோருடலையெடுத்தல் இடைவிடாது நிகழ்தலுமுண்டு. ஓர் உடலிலும் தங்காதமிகுந்த பாவத்தால் கற்போல் சூக்குமதேகத்துடன் பிரகிருதியில் சிறிது காலங்கிடந்து அக்காலம் செல்லுங்கால் கொடிய நரகத்தில் வீழ்ந்து அவ்விடத்துத் துன்புற்று இவ்வுலகத்து வந்து பிறத்தலுமுண்டு. ஆகையினாலே ஆன்மாக்கள் தாம் செய்து கொண்ட நல்வினையின் பயனாகிய இன்பத்தை சுவர்க்கத்திலும் தீவினையின் பயனாகிய துன்பத்தை நரகலோகத்திலும் சென்றநுபவிக்கும். அவ்வாறநுபவித்துத் தொலைத்துத் தொலையாமல் எஞ்சிநின்ற சஞ்சித வினைப்பயனைத் திரும்பவும் பூமியில் வந்து பிறந்து அநுபவிக்குமென் றறிவாயாக.

மா :—தாங்கள் மேற் கூறியவாறு நம்மாற் செய்யப்படு மிதமகிதங்கட்கு இவ்வுலகத்திலும் சுவர்க்கத்திலும் நரகத்திலும் அவற்றின் பயனாய இன்ப துன்பங்களை யநுபவித்தல் ஒரு புறமிருக்கட்டும். இவையெல்லாம் இறைவன் செயலால் நிகழ்வதல்லவா? இவ்வாறாயின் அரசனுடைய தண்டனை எற்றுக்கு?

குரு :—நன்று சொன்னாய்! இவ்வுலகத்துள்ளார் பெரும் பாதகங்கள் செய்



தால் செய்த அவருக்கு அரசனானவன் கொடிய தண்டஞ்செய்து மேலும் பாவஞ் செய்யின் இவ்வளவினன்றி இன்னுங் கொடிதாகச் செய்வேனெனச் செய்யப்படுந் தண்டத்தையெடுத்துச் சொல்லி அச்சமுறுத்தி அவன் பாதகத்தைத் தீர்ப்பன். அறிவுடையார் அவ்வாறு செய்வித்த பின்பு விதி வழி நடந்து பாவத்தின் பயனாகிய நரகத்திலழுந்தார். அந்த நரக தண்டம் இவ்வரச தண்டம்போல உண்டென்று கருதுவதற்கு அரச தண்டம் ஏதுவாகின்ற தன்மையுடையதாகும். இவ்வாறு அரசதண்டம் வைத்தது நரகதண்டம் வாராமல் பாவத்தைத் தொலைத்துக் காத்தற் பொருட்டும் அரசர் தண்டிக்கும்படியான நிலையில் வெளிப்படாமல் மறைந்து பாவஞ்செய்யின் நரக தண்டத்தை உயிர்க்குயிராகிய இறைவன் அறிந்து தருவனென்று அறிவுறுத்தற் பொருட்டுமாம். ஆகையினாலே அவ்வரசன் ஆணையும் எல்லாம்வல்ல இறைவனாணையால் நிகழ்வதன்றி சுதந்தரமாய் நிகழ்வதல்ல. ஆதலின் அதுபற்றிச் சங்கையொன்றுமில்லையென விடுக்க.

மா :—தாங்கள் கூறியவாறு சுவர்க்கலோகமும் நரகலோகமும் உண்டென்பதை ஒப்புக் கொண்டேன். இவற்றைத் தவிர வேறு உலகங்களும் உளவோ?

குரு :—"எழில் பெரிய அண்டங்களடுக்கா யமைத்த நீ யென் குறைகள் தீர்த்தல் பெரிதோ," என்றார் ஒரு பெரியார். ஆகையினாலே எல்லாம் வல்ல இறைவனா லாக்கப்பட்ட உலகங்கட்கோரளவில்லையாயினும் அவரருள் பெற்ற மெய்ஞ்ஞானிகள் ஒருவாறு 224 புவனங்களிருப்பதாகக் கணக்கிட்டுக் கூறியுள்ளார்கள். அவற்றை உன் சிற்றறிவிற் பதியுமாறு ஒரு சிறிது விளக்கிக் கூறுகின்றேன் கேட்பாயாக. சில முழங்கள் சேர்ந்தது ஒரு வீடு, சில வீடுகள் சேர்ந்தது ஒரு தெரு, சில தெருக்கள் சேர்ந்தது ஒரு கிராமம். சில கிராமங்கள் சேர்ந்தது ஒரு தாலுகா. சில தாலுகாக்கள் சேர்ந்தது ஒரு ஜில்லா. சில ஜில்லாக்கள் சேர்ந்தது ஒரு இராஜதானி. சில இராஜதானிகள் சேர்ந்தது ஒருதேசம். சில தேசங்கள் சேர்ந்தது ஒரு கண்டம். சில கண்டங்கள் சேர்ந்தது ஒரு உலகம். இவ்வாறு பல உலகங்கள் சேர்ந்தது ஓர் அண்டம். இப்படிப் பல அண்டங்கள் சேர்ந்தது ஒரு புவனம். இவ்வாறு 224 புவனங்களிருப்பதாகப் பெரியோர்களாலே கூறப்பட்டிருப்பதை யறிந்து கொள்வாயாக.

மா :—மேற்கூறிய 224 புவனங்களும் எங்கே யமைக்கப்பட்டிருக்கின்றனவென்று சொல்லக் கூடுமா?

குரு :— ஆகாயத்தில் தெரிகின்ற கணக்கிட முடியாத நக்ஷத்திரங்களெல்லாம் ஒவ்வோர் உலகமேயாகும். ஆகையால் எல்லாம்வல்ல இறைவனருளால் 224 புவனங்களும் ஆகாயத்திலமைக்கப்பட்டிருக்கின்றனவென் றறிவாயாக.

மா :—தாங்கள் மேற்கூறியவாறு புவனங்கள் 224 என்பதற்கு ஆன்றோர் அருள்மொழி காட்டக் கூடுமா?

குரு :—கூடும். சிவஞான சித்தியார் 8-ஆம் சூத்திரம் முதலதிகரணம் 9-வது செய்யுளின் ஈற்றடியில் "ஆய்ந்தபுரம் இருநூற்றே டிருபத்து நாலாம்", என்று நமது சந்தானாசாரியராகிய அருணந்தி சிவம் அருளியது கொண்டு தெளிந்திடுக.

# மௌனத்தில் சிந்திக்கத் தகுந்த கருத்துகள்

*A translation from the "Epoch" December 1928*

[N. இராமலிங்கம் பிள்ளை]

(1) வாழ்க்கையிலும், ஒழுக்கத்திலும் நன்னடக்கையைப் போல உத்தரவாதம் செய்வது பிறிதொன்றில்லை.

(2) அன்புள்ள அல்லது ஆத்மதானச் செயலொன்றினைச் செய்ததற்கு நீ வருந்தாதே. அவைகள் எப்பொழுதும் சமாதானத்தைப் பயக்குகின்றன.

(3) நன்மை செய்ததன் பயனாக, நீ துன்பத்தை யனுபவிக்க மாட்டாய். தீமை செய்து ஆக்கத்தையாவது பாக்கியத்தையாவது அடைய முடியாது.

(4) தீமையுடன் இணக்கஞ் செய்யாதே. என்றும் மெய்யை நாடினால் உனக்கு எல்லாமினிதாய் முடியும்.

(5) சிறியதொரு அற்பக் காரியத்திலும் பிறனை ஏமாற்றாதே. உன்னிடத்தி லில்லாததை உளதாக நடிக்காதே. இக்கபடச் செயல் தொடர்ச்சியான துன்பங்களைச் சூழ்விக்கும்.

(6) வாய் திறவாமை, சைக்கினை, ஓர் அறிக்கை இவைகள் மூலமாய் வஞ்சித்தல், பொய் சொல்வதற்கொப்பாகும்.

(7) பொருள் குவித்தலிலேயே கருத்தூன்றியவன் இறுதியில் தன் ஆத்துமாவைக் குன்றிவிடச் செய்கிறான்.

(8) மற்றவர்களிற் குற்றங்காணாதே. குற்றங் கூறுதல் எப்பொழுதும் கூறுபவனுக்கு ஏதாமொரு துக்கத்தைப் பிரதி யுபகரிக்கிறது.

(9) தன்னையே யறிந்து நட. அயலாரை உற்று நோக்க வேண்டாம்.

(10) கடவுளுடைய அன்பு எங்கும் செறிந்திருக்கிற தென்பதை நாம் உணர்வோமானால் எத்தகைய பாக்கியவான்களா யிருப்போம்.

(11) உண்மை சிநேகிதனா யிருப்பது ஒரு பெரும் புண்ணியம். உன்னுடைய நண்பன் உன்னிடத்தே நம்பிக்கை வைக்கலாமா?

(12) மெய்யான நட்பு தெய்வத்தன்மையது. கடிதங்கள், வெகுமதிகள், சகாயங்களால் உண்டாவதன்று. ஆப்த சிநேகம் இவைகளால் ஆவதல்ல.

(13) பிறனொருவனுக்குச் செல்வம் வந்துழி நீ பெருமகிழ்வெய்த வேண்டும். உன் சிநேகிதனுடைய இன்பத்தில் களிகூர வேண்டும்.

(14) உயிருள்ள ஒவ்வொரு ஜீவப் பிராணியிடத்தும் உன்னுடைய இருதயத்திலே சாந்தம் இருக்கிறதோ வென்று கருதுக.

(15) நீ மிகுந்த செல்வவானா யிருக்கலாம். ஆனால் உன்னிதயத்தில் அன்பு, கருணை நிறையப்படா விட்டால் உண்மையாகவே நீ ஏழைதான்.

(16) உன்னுடைய மனமும் கொடுப்பதோடு ஈடுபடும் வரை ஈவதை நிறுத்தி வை.



(17) கைம்மாறு கிடைப்பதைக் கிஞ்சித்தும் எதிர்பார்த்துக் கொடாதே.

(18) நான் தியாகம் செய்தது என்னிதயத்தை இன்பப்படுத்திற்று. என் சொந்தத்திற்காகத் தெரிந்து வைக்கப்பட்டவை என்னைத் தனியே ஒதுக்கின.

(19) உலகத்தில் சமாதானம் பெருகும்படி என்றும் இன்றும் பிரார்த்தனை செய்.

(20) நான் எல்லாரிடத்திலும் அன்புள்ளவனா யிருக்கிறேன். ஒருவரையும் வெறுப்பதில்லை.

(21) அன்பு நிறைந்த வாழ்வே, பேரின்பமெய்திய வாழ்வு.

---

# குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை

[R. M. அண்ணாமலை செட்டியார்]

**மா**ணவன் :—சித்தாந்த சிகாமணியே! தாங்கள் இப்போது அவகாசமாக விருப்பதாகத் தெரிவதால் சில உண்மைகள் தெரிய விரும்புகின்றேன். அதாவது சுவர்க்கலோக மென்றும் நரகலோகமென்றும் வேறு உலகங்களிருப்பதாகச் சொல்லிக் கொள்கின்றார்களே! அஃதுண்மைதானா?

குரு :—ஆம். அதற்கென்ன சந்தேகம்.

மா :—அதற்கென்ன பிரமாணமிருக்கின்றது.

குரு:—ஒரு பொருள் உண்டா. இல்லையா வென்பதைத் தெரிந்து கொள்வதற்குக் காண்டல், கருதல், உரை யென்னும் மூன்றளவைகளிருக்கின்றன அல்லவா! அவற்றுள் நீ கேட்கிற சுவர்க்க லோக நரகலோகங்களை உரைப் பிரமாணத்தாலன்றி ஏனைய இரண்டு பிரமாணங்களாலும் அறிய முடியாதாகலின் அவை உண்டென்பதற்கு உரைப்பிரமாணம் காட்டுகின்றேன். கேட்பாயாக. "சுவர்க்கத்திருந்தனை நரகிற்கிடந்தனை இன்பமுந் துன்பமுமிந் நிலத்தருந்தினை" என்று முற்றத்துறந்த முனிவராகிய பட்டினத் தடிகளருளியது கொண்டும், "அடக்க மமரரு ளுய்க்கும், மடங்காமை யாரிரு ளுய்த்துவிடும்," என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரருளியது கொண்டும் சுவர்க்கலோகம் நரகலோகம் வேறுண்டென்பதைக் கண்டுகொள்வாயாக.

மா :—தாங்கள் மேற் கூறியவாறு சுவர்க்கலோகம் நரகலோகம் உண்டென்பதற்கு உரைப் பிரமாண மிருந்தாலும் எனது யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஒத்திருந்தா லன்றி அதனைப் பிரமாணமாகக் கொள்வதெப்படி?

குரு :—மடமை யானவனே, உரைப் பிரமாணம் யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஒத்திருக்க வேண்டுமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் நீயோ சிற்றறிவும் சிலநா ளநுபவமுமே வாய்க்கப் பெற்றவன். உரை செய்தவர்களோ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பெற்ற மெய்ஞ்ஞானிகள். அவர்கள் உன்னைவிட யுத்தியிலும் அநுபவத்திலும் சிறிதும் குறைந்தவர்களல்லர். அப்படியானால் உரையைப் பிரமாணமாகக் கொண்டு எதன்

காரணம் மறதியென்றே நன்றாக அறியக் கிடத்தலால் முற்பிறவி இப்போது நினைவிற்கு வாராதிருத்தலில் என்ன ஆச்சரிய மிருக்கின்றது. ஆகையால் அதுபற்றி யாசங்கை யொன்று மில்லையென விடுக்க.

மா :— குருநாதரேறே! அரிய பெரிய வுண்மைகளை மிக எளிய நடையில் என் உளங்கொளுமாறு உபதேசித்தருளிய தங்கட்கு என் வணக்கம் பன்முறை உரியதாக.

---

# சமய இயக்கம்

[காழி. சிவ. கண்ணுசாமி, B. A.]

ஒவ்வொரு மகனது ஒவ்வொரு செயலும் உணர்வு, அறிவு, குறிப்பு, என்ற மூன்றின் வயத்ததாய் எழுவதாகும். குறிப்பென்று ஈண்டுரைத்தது பிறனுள்ளங் கவர்ந்து தன்னினையூட்டுவதாய குறிப்புணர்த்து நித்திரையையே (Hyprosism). ஒரோவிடத்து உணர்வு என்ற ஒன்றினால் மட்டுந் தூண்டப்பட்டே ஒருவன் ஒரு செயலைச் செய்து முடிக்க முயல்வதுண்டு. பிறிதோர் காலத்து அறிவு என்னும் கருவியான் மட்டுந் தூண்டப்பெற்று அவனே பிறிதொரு பணியை மேற்கொண் டாற்றலுமுண்டு. மற்றும் ஓர்வயின், உணர்வு, அறிவு என்ற இவ்விரண்டினு முட்படாமல், தன்னுள்ளத் தியற்கையாயெழும் ஒரு குறிப்பின் வழியோ அன்றிப் பிறர் உணர்த்திய குறிப்புணர்ந்தோ அவன் தன் செயலாற்றிச் செல்வதுமுண்டு. இறுதியிற் குறித்த இதுவே மக்கள் இயற்கையிற் பெரும்பகுதியாக நிகழ்வதாகும்.

இனி, இக்குறிப்புணர்த்திய வழி ஒருவன் செயலாற்றுங்கால் தனது தெருண்ட அறிவுடன் ஆற்றுகின்றானோவெனின் இல்லை; பெரும்பாலும் அக்குறிப்புதானும் உண்ணின்றுணர்த்த ஒரு இயங்கு பொறியன்ன (automaton) அவன் தன் செயலை நடத்திச்செல்கிறான். எனவே பொதுப்படக்கூறுமிடத்து மக்கள் தம் செயல்கள் ஒவ்வொன்றினும், மேற்குறித்த மூன்று தூண்டுதல்களும் கலக்கின்றன என்பது பெறப்படும். இதனை ஒரு சிறிது விளக்குவாம். உணர்வு எனக்கூறியது ஒருவனை ஒரு செயலைச் செய்யுமாறு முதற்கண் தூண்டுகிறது. அத்தூண்டுதல் வந்தவுடன் அறிவு என்றது அவ்வாறு செய்ய வெண்ணிய செயல் தானும் இடத்திற்கும், காலத்திற்கும், பொருத்தமாயிருக்கின்றதா எனச் சீர்தூக்கிப் பார்க்கின்றது; குறிப்பு என்பதோ இவ்வாறு உணர்ச்சி வயத்ததாய் எழுந்து அறிவினால் ஆய்ந்து பார்த்துத் தக்கதெனத் துணியப்பட்ட ஒரு செயலை, மற்றெவ்வித உணர்வும் அறிவுமின்றியே, ஒருவன் செய்து முடிக்குமாறு ஊக்குகின்றது. உணர்வின்றேல் ஒருவன் ஒரு செயலை மேற்கொள்வதென்பது இயலாது; அறிவின்றேல் ஒன்றிற்கொன்று முரணை பல உணர்வுகளினிடைச் சிக்கித் தனக்கும் பிறர்க்குந் தீங்கு பயப்பதாய பல செயல்களை அவன் ஒருங்கே செயத் தலைப்படுவான்; இனி, தன்னுள்ளத்தெழுந்த ஒரு குறிப்பின் வழியோ அன்றிப் பிறர் உணர்த்திய குறிப்பின் வழியோ நடந்து கொள்ளும் இயற்கையாற்றல் என்ற ஒன்றின்றேல் ஒரு செயலைச் செய் என்று இடைவிடாது தூண்டிக் கொண்டிருக்கும் உணர்ச்சி வயப்பட்டவனுய் செயப்புகும் செயல் அறிவிற்குப் பொருத்தமுடையதோ இல்லையோ என்று பலகாலும் ஆய்ந்து முடிவுகட்டும் ஒரு பயனில் உணர்ச்சியை ஒருவன் கொண்டிருப்பானே தவிரத் துணிந்து செயலாற்றப் புகுவதில்லை; அஃதாவது உணர்வின் தூண்டுதற்கும் அறிவின் ஆய்தலுக்குமிடையிலேயே ஊசலாடிக் கொண்டிருப்பானென்றபடி. எனவே எத்துணை யெளியதோர் செயலேயாயினும் அதற்கும் உணர்வு, அறிவு, குறிப்பு என்ற மூன்றும் இன்றியமையாது வேண்டப்படுவனவாகும் என்பது விளங்கும். ஒருவன் ஒரு குறிப்பிட்ட இடநோக்கிச் செல்கின்றானெனக் கொண்டால் அவன் முதற்கண் இருந்த விடத்திலிருந்து குறிப்பிட்ட அவ்விடத்திற்குச் செல்ல வேண்டுமென உணர்வு அவனைத் தூண்டியது.

அத்தூண்டுதலின் வழிச் செல்லக் கருதுதல் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றதாகுமா என்பதை அவனது அறிவு உடனே ஆய்ந்து பார்த்து ஏற்றது தான் என்ற முடிவிற்கு வந்தது. இனிக் குறித்த இடஞ் சேறற்குப் பல வழிகளிருக்கலா மன்றே! அவற்றுள் இவ்வழிச் சென்றால் எளிதிற் சேரலாம் என்றதை அவன் உள்ளத்தினுள்ள குறிப்பு உணர்த்திற்று. உடனே அவனது உடல் அசைவுற்றுக் குறிப்பின் வழி இயங்கிச் செல்கின்றது. இவ்வாறு குறிப்பின் வழி அவன் செல்லத் தொடங்கியவுடன் இச்செயற்கு அவனை முன் தூண்டிய உணர்வென்பதும், அதனை ஆய்ந்த அறிவென்பதும் இனி வேண்டப்படுவதில்லையாய் மற்றொரு செயலைக் குறித்துத் தூண்டுதல் செய்யவும், அதனை ஆய்ந்து முடிவு கட்டவும் அவைகள் வசதி பெறுகின்றன. இவ்வசதியைப் பெறுவதற்கு மேற்குறித்த குறிப்பென்றதின் வழி இயங்கும் ஆற்றல் ஒருவற் கில்லையாயின் இயலாது எனக் கூறவும் வேண்டுமோ? இம்முறை பற்றியே ஒருவனது ஒவ்வொரு செயலும் ஆளப்பட்டு நடைபெறுகின்றன. மக்கட் செயல்களெல்லாவற்றிலுஞ் சிறந்ததாய சமயச் செயலு மிவ்வாறே.

பேரறிவினனுய இறைவனுக்கும், சிற்றறிவினனுய மகனுக்கும் இடையே ஒரு தெய்விகத் தொடர்பு ஏற்படுத்திக்கோடல் இன்றி யமையாததாகும் என்பதை உணர்வு இடை விடாது தூண்டுகின்றது. அத்தொடர்பு தானும் எத்தகையதாய் அமைதல் வேண்டும் என்பதை அறிவு வரையறுத்து முடிவு கட்டுகின்றது. குறிப்போ அவ்விதத் தொடர்பொன்று இன்றி யமையாது வேண்டப்படுவதாகுமென்பதுணர்ந்து அதன் ஏற்புடைமை அறிந்துழி அதன் வழி அவன் செயக் கடவதாய செயலில் அவனை ஆற்றுப்படுத்துகின்றது. இது முற்ற முடிந்ததோர் உண்மையேயாயினும் எக்காலத்திற்கும் பொருந்துமோ வெனிற் பொருந்தாது. ஏனெனிற் கூறுதும். ஒரு சமயத்தின் உயிர்ப்பண்பு கெட்டு நிற்குங்காலத்து இம்முறை பெறப்படு[illegible]



187130

சமயப் பண்பு கேடுறின் கடைத் தலையதோர் குறிப்பொன்றே தடித்துத் தலையும் இடையுமாய் உணர்வும் அறிவும் தேய்வுறுகின்றன. இத்தடித்ததோர் குறிப்பின் வழிச் செயலாற்றிச் செல்லும் பெற்றி எந்நாட்டிற்கும், எக்காலத்திற்கும் சமயம் என்ற பிரிவு நோக்க, ஒத்ததும் ஒரு தன்மைத்தானது மாகும். இனி ஒரு மகன் உணர்வும், அறிவும் தேய்ந்து குறிப்பின் வழிச் செயலாற்றுவ தென்பது அவனது குழவிப் பருவத்திலும், அவனது குடும்பத்தில் பிறப் பிறப்புகள், மன்றல்கள் போன்ற சிறப்புகள் நடைபெறுங் காலத்திலுமே யாகும். இதை அவனது கையறு நிலை என்று குறிக்கலாம். இக்கையறு நிலையை ஒருவன் எய்தியக்கால் அவன் நெஞ்சம் இயல்பாகவே ஓவியங்களிலும், இன்னிசைகளிலும், நாடகங்களிலும் மற்று மிவைபோன்ற இன்பவுணர்ச்சி யொன்றே யளிக்கும் துறைகளிலும் சென்று ஆங்காங்குத் திளைத்துச் செயலற்று நிற்கும். இந்நிலை யாம் முதற்கண் குறித்த குறிப்புணர்த்து நித்திரை நிலைக் கொத்ததாகும். இந்நிலையில் இருக்கும் ஒருவனை யார் யார் எவ்வழி ஆட்டுவிக்க வேண்டுமென விழைகின்றார்களோ அவ்வழி ஆட்டுவித்தல் பெரிதும் எளிதே.

இந்நிலமிசைத் தோன்றிய ஒவ்வொரு சமயமும் தன் வளர்ச்சி காலத்தில் இந்நிலையை மிக எளிதிலெய்தித் தன் உயிர்ப் பண்பு இழந்து நில்லாதிருந்ததில்லை யென்றே துணிந்து கூறலாம். கிறித்து சமயம் இரண்டு பட்டதும் இதனாலேயே. கடவுள் உண்டா இல்லையா என்றதைக் குறித்துத் தன் ஆயுட்காலத்தில் எக்காலும் நினைத்ததே இல்லையென்று ஒப்புக்கொண்ட புத்தப் பெரியாரையே ஒரு கடவுளாக்கி அவருக்கு உருவ வழிபாடு கற்பித்து அதனான் புத்தமதம் பண்பினிழிந்து நின்றதும் இதனாலேயே. அருள் என்னும் அன்பின் குழவியே அரும் பரம் பொருளென வுணர்ந்து, எவ்வுயிரையும் தன்னுயிரெனக் கருதி, இன்னா செய்தலை யறவே யொழித்து ஏற்ற மிகுத்திருந்த சமண சமயம் சீர்கேடுற்று இறுதியில் எல்லாம் வெறுஞ் சடங்களானே வந்து நின்றதும் இதனானேயே. இனி நந்தம் சைவ வைணவ மதங்களும் இதனின் நீங்கிற்றில. பெருக்கற்று அடிசுடு மந்நாளும் ஒரு ஆறு தன் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டுகின்ற உண்மையை யாவரும் கண்கூடாகக் காணினும், பூப்பரப்பின் கீழ் நீர் எங்கும் பரந்திருக்கின்றது என்பதை ஒரு சிறு பகுதியினரே அறிவர். மற்றையோர் ஊற்றிலிருந்து நீர் வருகிறதென நம்புவார்களே யன்றி எங்கும் பரந்துள்ள நீர் ஊற்றின் வழியாக ஆண்டு வெளி வருகின்றது என எளிதில் அறியார். எனினும் ஊற்றிலிருந்து நீர் வருகின்றதென்ற ஒருகுறைபட்ட அறிவைக் கொண்டிருந்தாலும் அவர்கள் அந்நீரின் பயனை நுகர்ந்து நலமுறுகின்றனர். அவ்வாறு நலமுறுங் காலத்து நீர் கீழெங்கும் பரந்துள்ளதோ இல்லையோ என்றதைக் குறித்த ஐயப்பாடு அவர்கள் நெஞ்சத் தெழுவதில்லை. அஃதேபோல் எங்கும் நிறைந்ததோர் அன்பு வடிவினனான பரம்பொருள் ஒன்றுண்டென்பதைக் கற்றுணர்ந்த ஒரு சிலரே உண்மையில் அறிவர். அன்றிப் பாமர மக்கள் எல்லோரும் ஆற்றின் ஊற்றை யொத்ததோர் கண்கூடான சான்று கண்டாலன்றி அதன்கண் நம்பிக்கை வைத்தலரிதினு மரிது. ஆகவே அன்னார் அவர் தம் ஆற்றற்கேற்றவாறு பரம்பொருளின் உண்மை யுணர்ந்து அவ்வளவிலேனும் பயனுகர்தல் வேண்டுமென்பது கருதியே பெரியார் முன்னை நாளிற் கோவில்களும் அவற்றின்கண் உருவங்களும் வகுத்தனர். இறைவனது அருள் யாண்டும் சுரக்கினும் அதைச் சிற்றறிவினராய அறிவு திருந்தாப் பாமர மக்களும் எளிதிற்பெறும் முதற்படியாக ஒரு ஊற்றுக்கண் அமைத்து அளித்தலே இயற்கைச் செந்நெறியாகுமென்று சைவ வைணவப் பெருமூதாளர்கள் சமய உண்மைப் பண்புநிலை தெரிந்துதான் உருவங்க ளமைத்தனர். ஆயினும் உருவம் அறிவு திருந்தாப் பாமர மக்கட்கே யுரித்து, அது இறைவன் வழிபாட்டிற்கு முதற்படியே யாகும்; மற்று அறிவு திருந்திய பெரியார்க்கெல்லாம் இவ்வுருவங்களானோ, அவை யிற்றின் வழிபாட்டானோ உண்மையி லெய்தக் கூடிய பயன் ஏதுமில்லை; இறைவனது உருவங் கடந்த ஒண்ணிலையை அவர்கள் நன்கனம் அறிவார்களாதலின், என்ற இவ்வுண்மைப் பண்பு நிலை இற்றை ஞான்று அறவே மறக்கப்பட்டுக் கோவிலின் கண்ணுள்ள உருவமே உண்மை இறைவன் எனப் பிறழ உணரப்பட்டு அதற்கு அவ்வுணர்வின் வழியே வழிபாடியற்றுவது மன்றி, மக்களை யொப்ப அதற்கு மணமும், மன்றலும், போரும் தேரும் வெற்றியும் தோல்வியு மமைத்துச் சிறப்பித்துக் காட்டுவதே பெரு வழக்காய் முடிந்து நிற்கின்றது. இந்நிலை உண்மைக்கு மாறாயப் புன்மை நிலை என்பதுணர்ந்து பாமர மக்களைச் சைவ வைணவத்தின் முதற்படியி லிருந்து மேற்படிகளுக்குச் செலுத்த சைவ சமய அறிஞர்கள் முயலும் நாள் எந்நாளோ?

இனி இவ்வாறு ஒரு மதம் சீர்கேடடைவதற்குப் புற வேதுக்கள் ஒரு சிலவும் உள. அவையிற்றை அடுத்த இதழிற் குறிப்பாம்.



---

# நம்மவர்கள் புராணங்களை எம்மட்டில் நம்புவது?

## இந்து புராணங்கள் பதினெட்டு

[சா. நடேச நாயனார்.]

1. ஒரு சொற்ப வஸ்துவின் உண்மையையோ அல்லது ஒரு நியாயத்தையோ அறிய வேண்டுமானால் எவ்வளவோ விசாரணையையும், ஆதாரங்களையும் விசாரித்தும், பார்த்தும் நுட்பமாயறிய வேண்டிய தவசியமாயிருக்கிறது. அப்படி வெகுகாலம் ஆராய்ந்து பார்க்க வேண்டிய சாஸ்திரங்களையும், அத்துடன் சேர்ந்த புராணங்களிலுள்ள சரித்திரங்களையும் கதாகாலக்ஷேபங்களில் மூன்று மணி நேரத்தில் சங்கீதங்களுடன் புண்ணிய சரித்திரங்களை நடத்துகிற பாகவதர்கள் ஜனங்களுக்குப் பக்தி மேலிட்டு அன்பு செலுத்த வேண்டியதற்காக, ஒருவனுக்கு பக்திமட்டு மிருந்தால்போதும். எது செய்தாலும் கடவுள் மன்னித்துக் காப்பாற்றி விடுவார் என்று

சொல்வதினால் புராணம்பொய்யென்று சிலர் நினைக்கிறார்கள். அதில் எவ்வளவு உண்மையென்று ஆராய்ந்து கண்டு தெளியவேண்டும்.

2. புராணங்களில் ஸ்காந்த புராணம் முதல் புராணம். அதிலடங்கி யிருக்கிற கிரந்தங்கள் 12 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சிறிது சிறிதாக எழுதப் பட்டிருக்கின்றன. அவைகள் கந்தபுராணம் 6 காண்டம். உபதேச காண்டம் 1. காசிகாண்டம் 1. சிவதருமோத்தரம் 1. பிரமோத்திர காண்டம் 1. சூதசம்ஹிதை 1. வாயுசங்கிதை 1. ஆக பன்னிரண்டு அடங்கி யிருக்கிறது.

3. இவைகளில் உலகத்தில் மானிடனாய்ப்பிறந்த ஒருவன் உலகியல் நடத்த வேண்டியவிதத்தையும் தன் ஆத்மார்த்தத்துக்கு வேண்டியவைகளைத் தேடிக் கொள்வதற்கும் மற்றும் வேண்டிய சகல சாஸ்திரங்களையும் சட்டங்களையும் நமக்குக் கற்பிக்கிறதுடன், அப்படி நடந்து அதனால் முத்தியடைந்தவர்களைப் பற்றியும் விவரமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அவைகளை நம்புவதினால் நமக்கு நன்மையே தவிர தீமை ஒன்றுமில்லை. அவைகள் முழுவதையும் நம்பவேண்டியதுதான்.

2. புராணங்களில் கூறப்பட்டுள்ள நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்புகளில் சில பாகங்கள் புராணங்களிலிருக்க வேண்டிய இலக்ஷணத்துக்காகக் கற்பனை செய்யப்பட்டிருக்கின்றன.

5. முதல் 6 காண்டமாகிய கந்த புராணத்தில் சொல்லப்படும் அநேக விஷயங்களில் சூரபத்மன் என்னும் அசுரனால் ஹிம்சிக்கப்பட்ட தேவர்கள் பரமேஸ்வரனைப் பிரார்த்திக்க அவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கி ஆறுமுகக் கடவுளையனுப்பிச் சூரபத்மன் முதலியோரை சம்ஹரித்துத் தேவர்களை அவரவர் ஸ்தானத்தில் வைத்ததாகச் சொல்லப் படுகிறது.

6. கஷ்டப்படுகிற ஆன்மாக்கள் கடவுளைப் பிரார்த்தித்தால் கஷ்டத்தை நீக்கிச் சுகத்தைக் கொடுக்க வேண்டியது அவருடைய கடமை. அதைச் செய்திருக்கிறார் என்பது பொய்யாகுமா ?

7. அப் புராணத்தில் ஸ்திரீகளின் சாமுத்திரிகா லக்ஷணத்தில் ஒரு பாகமும், மற்றொருபாகம் காசிகாண்டத்திலும் சொல்லப்பட் டிருக்கிறது. அந்த சாஸ்திரத்தை வைத்துக்கொண்டு ஒரு பெண் பிள்ளையை அழைத்து (சோதித்து) சாஸ்திரத்தில் கண்ட எந்த இலக்ஷணமாவது இருந்தால் அந்தப் பலனை அவள் அனுபவித்தே யிருப்பாள். அப்பேர்ப்பட்ட சாஸ்திரத்தைப் பொய் யென்றே சொல்ல முடியுமா ?

8. சூரபத்மன் அரசாட்சி, அவன் தோள்வலிமை, அவன் பெற்றிருக்கிற அஸ்திரங்கள், அவைகளின்வீரம் முதலியவைகளைப் பற்றியும் சிலர் பரிகசிப்பார்கள்.

9. ஆங்கில இராஜாங்கத்தார் இன்னின்ன பரீக்ஷையில் தேறினவர்களுக்கு இன்னின்ன உத்தியோகம்இவ்வளவு சம்பளம், இவ்வளவு அதிகாரம் கொடுக்கப் படுமென்றும், பின்னும் யோக்கியதைக்குத் தக்கபடி உயர்வு, தாழ்வு தரப்படுமென்றும் சட்டங்களை ஏற்படுத்தி அந்தப்படி நடத்தி வருகிறார்கள். அந்தச் சட்டம் போலவே கடவுள் விரதங்களாகவும், யாகங்களாகவும், தபசுகளாகவும், பத்திகளாகவும் ஏற்படுத்தப்பட்ட பாடங்களைப்படித்து



அதன்படி செய்து அனுஷ்டித்துச் சோதனையில் தேறியவர்களுக்கு அதற்குத்தகுந்த பதவிகளைக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிற வேதவாக்கியத்தின்படி செய்துவருகிறார். அதன் சுருக்கமே ராஜாக்களுக்கு மனு தரும சுருக்கமாகக் கொடுக்கப்பட் டிருக்கிறது. அந்தச் சட்டப்படியே சூரபத்மனுக்கு நடந்திருப்பது பொய்யாகாது.

10. அஸ்திரங்கள், ரதங்கள் விஷயமாய் நம்பாமலிருந்தவர்கள், சமீபத்தில் நடந்த யுத்தத்தில் பத்திரிகை மூலமாய் வாசித்தவர்கள் முற்புராணங்களில் கூறியுள்ள அஸ்திரங்கள், பாணங்கள், ரதங்கள் இருந்தமை உண்மையென்று நம்பி சொல்லி யிருக்கிறார்கள். துஷ்டச் செய்கைகளுக்காக சில மந்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் பலத்தினால் அநேக ஏவல்களில் ஒன்றைச் செய்தாலும் அது எதிரியை யாவராலும் தடுக்க முடியாத அவஸ்தைகளுக் குட்படுத்தி யிருக்கிறது. பிறகு மந்திர சக்தியினால் அதினின்றும் சொஸ்த மடைந்தவர்களை நான் நேரில் பிரத்தியக்ஷமாய்ப் பார்த் திருக்கிறேன். அவர்களும் ஜீவந்தர்களா யிருக்கிறார்கள். துஷ்ட மந்திரங்கள் துஷ்டர்களையும், அக்கிரமக்காரர்களையும் வாதிக்கும். இந்த நிலையில் அஸ்திரம், பாணங்கள், ரதங்களுக்கும் மந்திர சக்திகள் இருப்பதைப் பொய்யென்று சொல்ல முடியுமா ?

11. ஆகையால் எந்தப் புளுகும் கந்தபுராணத்தில் இல்லையென்கிற பழமொழியை ஸ்திரப் படுத்துகிறது. இனி நண்பர்கள் ஏதாவது தாங்கண்ட புராணங்களில் தமக்குச் சந்தேகந் தோன்றினால் கேட்டல்கூடும். தெரிந்த வரையில் சமாதானம் சொல்லலாம்.

---

# சைவப்பெரியார் தனிக்கூட்டம்

[பத்திராசிரியர்]

இக்கூட்டம் திருநெல் வேலியில் 1929ஆம் மார்ச்சு மீ 29,30,31-ம் தேதிகளில் மிகச் சிறப்பாக சைவத் திருவாளர் ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் B. A., L. T. (Dy. Inspector of Schools) தலைமையில் செவ்வனே நடைபெற்றது. தமிழ் நாட்டின் பல பகுதிகளாகிய தொண்டைநாடு, சோழ நாடு, சேர நாடு, பாண்டிநாடு, நடுநாடு, கொங்குநாடு, ஈழநாடுகளிலிருந்தும் போந்த பல பேரறிஞர்களும் சைவ சபைப்பிரதிநிதிகளும் குழுமியிருந்தனர். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகநிலையத்தில் விஷயாலோசனைக் கூட்டமும் கணபதி விலாச நாடகசாலையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. வந்திருந்த பேரறிஞர்கட்கும் பிரதிநிதிகட்கும் தங்குவதற்கான வசதிகளெல்லாம் சிறப்பாக அமைக்கப்பெற்றிருந்தன.

முதல் நாள் வெள்ளிக்கிழமை காலை, கூட்டத்துக்கு வந்த பேரறிஞர் அனைவரும் திருமுறை முழக்கத்தோடு ஸ்ரீ நெல்லையப்பர் ஆலயத்தில் விதிப்படி வழிபாடுசெய்து திருவீதி வலம் வந்தனர். பின்னர் மாலை மூன்று மணிக்குக் கணபதி விலாசக் கொட்டகையில் பல சபைகளின் பிரதிநிதிகள் ஆதரவு மொழி கூறிய பின்னர் தலைவர் அக்கிராசனத் தமர்ந்தனர். பின்னர் வரவேற்புக் கழகத்தலைவர் திரு. மா. வே. நெல்லையப்பப் பிள்ளையவர்கள் நல்வரவுப் பத்திரம் வாசித்தனர்.

தலைவர் இரண்டு மணி நேரம் மிக ஆர்வத்துடன் சைவசமயத்தின் இன்றியமையாத கோட்பாடுகளையும் அநுட்டானங்களையும் விரிவாக எடுத்து விளக்கி, சைவசமயம் நல்லொழுக்கத்துக்குப் பெரிதும் அரண் செய்யும் தன்மை

புடையதென்றும், எல்லாச் சமயத்தோராலும் சமரசக் கொள்கையுடன் வழிபடுதற்குரிய தென்றும், ஆலயப் பிரவேசம் முதலிய சீர்திருத்த வழியிலும் நல்லொழுக்கம் உள்ள விடத்து மரபு வேற்றுமையின்றி எல்லா மக்களுக்கும் சமவுரிமை கொடுக்கும் இயல்புடையதென்றும், இப்போது வெளிவரும் குறைபாடுகள் சைவத்திலில்லை, சைவ சமயிகளிடத்தே சிறுபான்மை காணப்படுமென்றும், திருவருள் நெறியே சைவத்திற் சிரமேற்கொள்ளும் பெருநெறியாக விளங்குவ தென்றும் கூறி இப்போது சில பத்திரிகைகளின் பிரசாரத்தின் பலனாக சைவ உலகத்தில் ஏற்பட்டுள்ள பிளவும் நம்பிக்கைக் குறைவும் அறியாமையாலும் உண்மைச் சைவர்கள் உண்மைப் பிரசாரம் செய்யாத குறையினாலும் உண்டானவை என்றும் கூறினர். தலைவர் முன்னுரையின் விரிவு மற்றொரு இதழில் வெளிவரும்.

வெள்ளிக்கிழமை யிரவும் சனிக்கிழமை பிற்பகலும், இரவும் விஷய ஆலோசனைக் கூட்டம்கூடி பல சபைகளும் பேரறிஞரும் அனுப்பிய கருத்துக்களையும், ஆங்குக் குழுமியிருந்த பெரியார்களின் கருத்துக்களையும், தற்காலத்தில் சைவத்திற் குறைபாடுகூறும் அறிஞர்களின் கருத்துக்களையும் மிகச் செவ்வையாக ஆலோசித்துக் கீழ்வரும் தீர்மானங்களை ஏகமனதுடன் நிறைவேற்றிற்று. இத்தீர்மானங்கள் சனிக்கிழமை காலையிலும் ஞாயிற்றுக்கிழமை காலையிலும் கணபதி விலாசக் கொட்டகையில் சைவப்பொதுக் கூட்டத்தினருக்கு எடுத்து விளக்கப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்ரீ செல்லையப்பர் வசந்த மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அதில் திருவாளர்கள் வ. அரங்கசாமி ஐயர், கி. குப்புச்சாமி முதலியார், அ. மு. சரவண முதலியார், திரு. வி. உலகநாத முதலியார். ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் முறையே "ஆலய அமைப்பு" "திருக்குறளும், சைவமும்" "மெய்ப்பொருள் நாயனார்" "சைவத்தின் தற்கால நிலை" "சங்கநூல்களும் சைவமும்" என்பனபற்றி அரியவிரிவுரைகள் நிகழ்த்தினார்கள். இறுதியில் அனைவருக்கும் நன்றியுரையும், கடவுள் வாழ்த்தும் கூறியபின் சபை இனிது கலைந்தது.

## தீர்மானங்கள்

1. நல்லொழுக்க வாழ்க்கைக்குக் கடவுள் உண்டென்னும் கொள்கை இன்றியமையாதது.

2. சைவ சமயம் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்த முள்ளதாயும் அன்பு நெறியினையே அடிப்படையாகக் கொண்டதாயும் இருத்தலின் அஃது எக்காலத்துக்கும் எச்சமூக நிலைக்கும் இசைந்ததா யிருக்கிறது.

3. பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) என்னும் முப்பொருள் உண்மையையும், அப்பதி சிவமே யென்பதையும் கடைப்பிடித்தல் சைவ சமயத்தின் கோட்பாடாகும்; சைவ உணவு கொள்ளுதல் சிவ சின்னங்கள் அணிதல் என்பவற்றோடு சரியை, கிரியை, யோகம், ஞானங்களில் அக்கோட்பாடுகட் கிசையப் பயிலுதல் சைவ சமயத்தின் அநுட்டான மாகும்.

4. சைவ சமயத்துக்குப் பிரமாண நூல்களாவன பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் அவைகளின் கருத்துக்கு மாறுபடாத வேத சிவாகமப் பகுதிகளும் ஆகும்.

5. சைவ சமயிகள், சைவசமயக் கோட்பாடுகளையும் அனுட்டானங்களையும் மறக்காத எவ்வித ஆராய்ச்சியுஞ் செய்தல் சைவ சமய விரோதமாகாது.

6. சைவ சமயிகளும் பிறருஞ் செய்யும் சமய ஆராய்ச்சிகளின் முடிபுகள் ஒப்புக்கொள்ளத் தக்கனவா அல்லவா என்று தீர்மானித்தற் பொருட்டுத் தனிக்கழகம் ஒன்று நிறுவி அதற்குரிய சைவ அறிஞர்களை சைவ சித்தாந்த மகாசமாஜத்தார் ஆண்டுதோறும் தெரிந்தெடுக்க வேண்டும்.

7. சைவ சமயிகள் கடவுள் உண்டென்னும் கொள்கையைப் பாதுகாப்பதிலும் பொதுநலங் கருதிய அருளொழுக்கத்தைப் பரப்புவதிலும் தம்மோடு இணங்கிவரும் ஏனைச் சமயிகளோடு ஒத்துழைத்தல் வேண்டும்.

8. சைவ சமயமானது பிற சமயங்களைச் சோபான முறையில் தழுவுவதில் சைவ



(8) வாகனங்களிலும் சுவாமியின் மேற் சாத்தும் பூமாலைகளிலும் எலெக்டிரிக் விளக்குகள் வைத்தல், வர்த்தக விளம்பரங்கள் முதலியன விளக்கும் வாணவேடிக்கைகள், சதிர்க்கச்சேரி, மேளக்கச்சேரி, முதலியன வீணாடம்பரச் செலவுகளாகும். இவைகளை யறவே யொழித்துத் திருமுறை பாராயணம், சைவப்பிரசங்கம், அறிஞர்கூட்டம் முதலியவைகளை நடத்துதல் திருவிழாவின் இன்றியமையாத சிறப்பங்கம் என்று வலியுறுத்துவது இப்பகுதி.

(9) இப்போது வந்துள்ள சட்டத்தின குறைபாட்டை விளக்குவது.

(10) நிர்வாண மக்களுருவங்கள், மெய்யுறு புணர்ச்சி யுருவங்கள் முதலியன கோபுரங்களிலும், தேர்களிலும், மண்டபக்கால்களிலும் சிற்பமாகவும், பிரகாரங்களிலும் திருமதில்களிலும் ஓவியமாகவும் பல சிவாலயங்களில் இன்றும் காணப்படும். இவைகளை அறவே ஒழித்தல் வேண்டும்.

(11) உடையவர்களையே என்பதால் [illegible] என்பது பொருள்.

[illegible] திருவிழாக்களிலும் கூடாதென்பது கருத்து.

(13) 'உரிய செலவுகள்' என்பதால் ஆடம்பரத்தை யொழித்த வகையில், தேவையான அளவு என்று துணியவும். பிற சமயக் கல்விக்குப் பயன்படுத்தா திருத்தல் என்பது இராமேச்சுரம் தேவஸ்தானத்தார் வடமொழிக்கலாசாலை வைத்து சங்கர வேதாந்தம் கற்பித்தலைக் கண்டித்து அதை ஒழிக்கும் நோக்கமுடையது. இராமேச்சுரத்தைப் போல் வேறு பல இடங்களிலும் இருத்தல் கூடும்.

(14) வேத பாராயணத்தில் இந்திரன் முதலிய தேவர்களுக்கு ஆடு முதலியவைகளைப் பலி கொடுப்பதாகக் கூறும் பகுதிகளை நீக்கி சிவத்தைக் குறித்த பகுதிகளையே ஓதுவித்தல் இதன் நோக்கம்.

14. அதிகாரி, ஆசாரியர், செயல் வகை முதலியவைகளைத் தீர்மானித்தற்கே இக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. இது 10-5-1929-க்குள் தமது அறிக்கையை சைவ மகாநாட்டுக்கு அனுப்பி வைக்கும்.

15. சைவப் பெண்டிர்க்குச் சம உரிமையும் கடமையும் சைவ சமயத்தில் இல்லையென்பார் கூறுவதை மறுத்து உண்மையுரைப்பது இத்தீர்மானம்.

16. இத்துறையில் ஏனைய சமயிகளோடு சைவர்கள் ஒத்துழைத்தல் வேண்டப்படும்.

17. இவ்வறிஞர்கள் திருப்பாதிரிப்புலியூரில் சைவ மகாநாடு முடிந்தவுடன் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனார் கோயில், குன்றக்குடி, மதுரை இவ்விடங்களுள்ள செல்வமிக்க சைவப் பெருமடங்கட்குச் செல்வர். இவ்வறிஞர்கள் கூறுவதை அம்மடாதிபதிகள் ஒப்புக் கொண்டு பொருளுதவி புரிந்து திருப்பணியும் செய்யத் தொடங்குவர் என்று எதிர்பார்க்கிறோம்.

18. இத்தீர்மானம் சைவசித்தாந்த மகா சமாஜத்தைத் தலைமைச் சைவக் கழகமாக்கும் நோக்கமுடையது.

19. சமத்துவத்தை (Federal Basis) அடிப்படையாகக் கொள்ளும் வகையில் தாலுகா ஜில்லாச் சபைகளை நிறுவுதல் இதன் நோக்கம்.

20. [illegible] சே[illegible] Co[illegible] சிற[illegible] உ[illegible] கிறது.

இந்தத் தீர்மானங்களைச் செவ்வனே ஆராய்ந்து ஒவ்வொரு சைவரும் சைவ சபையும் தமது கருத்துக்களை விரிவாக 1-5-29க்குள் ம. பாலசுப்பிரமணிய முதலியார், காரியதரிசி, சைவசித்தாந்த மகாசமாஜம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை, என்ற விலாசத்துக்குத் தெரிவிக்கவேண்டும். 1929ளு மேமீ 17, 18, 19, 20-தேதிகளில் மேற்கண்ட தீர்மானங்களையும் அவற்றைப்பற்றி வெளிவரும் கருத்துக்களையும் ஆலோசித்து முடிபுகள் காண திருப்பாதிரிப் புலியூரில் ஒரு சைவ மகாநாடு நடைபெறும். அதன் நடைமுறை விவரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

சமயிகள் பிற சமயிகளோடு சகோதரத்துவம் பாராட்ட வேண்டும்.

9. சைவ சமயிகளுள் சைவ ஆசாரமுடைய எம்மரபினர்க்கும் ஆலய வழிபாடு முதலிய சமய உரிமைகள் சமமாயிருத்தல் வேண்டும்.

10 ஆலயத்தில் சென்று வழிபடும் மக்கட்குக் கடவுள் சந்நிதியில் எவ்வகையான உயர்வு தாழ்வுகளும் பாராட்டப்படுதல் கூடாது.

11. பிற சமயத்தினர் சைவசமயக் கோட்பாடுகளையும் அனுட்டானங்களையும் ஒப்புக்கொண்டு சைவசமயம் புகும் தமது விருப்பத்தை ஒரு சைவ சபையாருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவித்தால் அச்சைவ சபையார் அவ்வறிவிப்பைப் பதிவு செய்துகொண்டு திருநீற்றுப் பதிகத்தையும் பஞ்சாக்கரப் பதிகத்தையும் ஓதுவித்துத் திருநீறு அணிவித்து அவர்களைச் சைவ சமயத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் சமய உரிமைகள் அனைத்துக்கும் உரியராவார்கள்.

12. சைவ சமய வளர்ச்சிக்கு வழிகளாவன :—

[illegible]

மடங்கள் பெருஞ் சைவ சபைகள் செல்வர்கள் முதலியோர்களால் சம்பளம் அல்லது ஊதியங் கிடைக்கும்படிச் செய்தல்.

(3) ஆங்கிலத் தமிழ்க் கல்லூரிகளில் சைவ சமய மாணவர்க்கு அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுச் சைவசமய போதனை செய்வித்தல்.

(4) சமய நூல் பரிசோதனைகள் நடத்துதலும் தேறியவர்களுக்குப் பரிசளித்தலும்.

(5) சைவ சமய உண்மைகளை விளக்கும் ஆண்டுப் பத்திரிகைகள் வெளியிடுதல்.

(6) தக்க புலவர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் கூடிய கழகவாயிலாக சைவ சமயக் கோட்பாடுகளையும் அனுட்டானங்களையும் யாவர்க்கும் எளிதாய் நன்கு விளக்கும் உரைநடை நூல்களை வெளியிடுதல்.

(7) சைவ சமய உண்மைகளை அறிவியல் நூல் கருத்துக்களோடும் பிற சமயக் கருத்துக்களோடும் ஒத்துப் பார்த்து ஆராய்ச்சி செய்யும் சைவப் புலவர்களை ஆதரித்தல்.

(8) ஆங்கிலத்தில் ஒரு மாதாந்தப் பத்திரிகை நடத்துதல்.

(9) பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட சைவ சமயிகளுள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சைவ சபையின் உறுப்பினராயிருக்கும்படி வேண்டிக்கொள்ளல் என்பனவும் ஏனைய பிறவுமாம்.

13 திருக்கோயிலில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களாவன :—

(1) பூசனை புரிவோர்களுக்குச் சைவ சமய உணர்ச்சி உண்டாதற்குரிய கல்வி பயிற்றுதல்.

(2) அவர்கட்குத்தக்க சம்பளம் அல்லது ஊதியம் கிடைக்கும்படிச் செய்தல்.

(3) சைவ சமயிகளைக் கொண்டே சிவாலயங்களில் வேத பாராயணம் முதலிய கைங்கரியங்கள் அனைத்தையும் செய்வித்தல்.

(4) தக்க ஆதி சைவர்கள் இடையாத

[illegible]

களிலே முறையாக ஓதுவித்தல்.

(6) ஆலயங்களில் நுழைந்துள்ள பிரவேசக்கட்டணம் முதலிய வழிபாட்டுத் தடைகளை நீக்குதல்.

(7) சைவசமயக் கொள்கைகட்கும் சிவாகம விதிகட்கும் முரணாகாத முறையில் நித்திய நைமித்திய பூசைகளை நடத்துவித்தல்.

(8) திருவிழாக்களிலே பக்தி ஞானங்களைக் குன்றச் செய்யும் வீண்டம்பரச் செலவுகளை நீக்கி, சிவத்துவம் விளங்குதற்குரிய திருமுறைப் பாராயணம் சமயப் பிரசங்கம் சைவ அறிஞர் கூட்டம் முதலியவைகளையே நிகழ்த்துவித்தல்.

(9) சிவாலயங்களிலே தேவ தாசிகட்கு பொட்டுக் கட்டுதலையும் அவர்கள் ஊழியத்தையும் ஒழித்தல்.

(10) திருக்கோயில்களிலும் தேர்களிலும் இப்பொழுது உள்ள இழிவான சிற்பங்களை ஒழித்தல்.

## மேற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றிய விஷயாலோசனைக் கூட்ட உறுப்பினர் (ஒவ்வொருவர் பெயரோடும் சைவத்திருவாளர்...அவர்கள் என்று கூட்டியுரைக்கவும்)

1. ச. சச்சிதாநந்தம் பிள்ளை
2. மா. வே. நெல்லையப்பப் பிள்ளை
3. விருதை-சிவஞான யோகிகள்
4. ந. சிவகுருநாதம் பிள்ளை
5. தெ. ச. சு. சோமசுந்தரம் பிள்ளை
6. திரு. வி. உலகநாத முதலியார்
7. அ. முத்தைய பிள்ளை
8. டி. பி. நெல்லை நாயகம் பிள்ளை
9. எஸ். முருகப்ப பிள்ளை
10. என். இராமலிங்கம் பிள்ளை
11. இ. குப்புச்சாமி முதலியார்
12, ச. நடேச முதலியார்
13. கா. சுப்பிரமணியம் பிள்ளை
14. கு. அரங்கசாமி ஐயர்
15. ப. சொக்கலிங்கம்
16. ந. மு. வேங்கடசாமி நாட்டார்
17. எஸ். பாலசுப்பிரமணிய முதலியார்
18. சி. வ. வீரவாகுப் பிள்ளை
19. அ. மு. சரவண[illegible]
20. சி. த. சிதம்ப[illegible]
21. ச. முத்துக்கு[illegible]
22. [illegible] சோமசுந்த[illegible]
23. [illegible] பாலசுப்பி[illegible]
24. [illegible] இராஜரத்[illegible]ம்
25. எம். [illegible] செட்டியார்
26. டி. எஸ். கந்தசாமி முதலியார்
27. எஸ். பி. முத்துசாமிப் பிள்ளை
28. பு. சி. புன்னைவனநாத முதலியார்
29. வீ. குமாரவேல் பிள்ளை
30. வ. முத்தைய பிள்ளை
31. ப. இராமநாத பிள்ளை
32. அ. பேச்சுமுத்து பிள்ளை
33. அ. சுடலைமுத்து பிள்ளை
34. மு. பி. திருக்குற்றாலம் பிள்ளை
35. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை
36. பி. அருணாசலம் பிள்ளை
37. பி. பி. முத்துசாமிப் பிள்ளை
38. சங்காமூர்த்தியா பிள்ளை
39. அ. ரா. அமிர்தஞ் செட்டியார்
40. [illegible] நமசிவாயஞ் செட்டியார்
41. எஸ். கனகசபாபதிப் பிள்ளை
42. காருடை-சு. சூரியமூர்த்தியா பிள்ளை
43. என். காளியப்ப பிள்ளை
44. பி. நடேச முதலியார்
45. எம். கணபதிப் பிள்ளை
46. சி. ந. சுப்பிரமணியம்
47. காழிகாவலப்பெருமான் பிள்ளை
48. ஆர். கோவிந்தன்
49. வ. சி. தங்கவேற் பிள்ளை
50. பரலி-சு. சண்முகசுந்தரம் பிள்ளை
51. அ. காளியப்ப பிள்ளை
52. பா. ரா. பரமசிவ முதலியார்
53. வ. உ. சிதம்பரம் பிள்ளை
54. ச. சபாபதிப் பிள்ளை
55. ரா. பதுமநாபப் பிள்ளை
56. கெ. ஆறுமுகம் பிள்ளை
57. டி. ஆர். சிதம்பரம் செட்டியார்
58. ரா. பி. சேதுப் பிள்ளை
59. எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை
60. இ. ச. சிவராமலிங்கம் பிள்ளை
61. ப. சா. கந்தசாமி வர்மா
62. ஈ. சுப்பிரமணிய பிள்ளை
63. அ. வீ. வீரபத்திர பிள்ளை
64. எஸ். மகாதேவன்
65. அ. க. அரியநாயகம் பிள்ளை
66. தீ. சு. சீனியா பிள்ளை
67. [illegible]. வெ. புன்னைவன செட்டியார்
68. [illegible] குற்றாலலிங்கம் பிள்ளை
69. பி. இராமசுவாமியா பிள்ளை
70. [illegible]. எஸ். அமகியநம்பி[illegible] பிள்ளை
71. டி. வி. கல்யாணசுந்தர[illegible]ளை
72. வி. ராமசாமிப் பிள்ளை
73. முத்துக்குமாரப் பிள்ளை
74. எஸ். ஐயம்பெருமாள் பிள்ளை
75. பி. ஆர். மீனாக்ஷிசுந்தரம்
76. சொ. கணபதியா பிள்ளை
77. நாலாயிர முதலியார்
78. சிவானந்த சிவாசாரிய சுவாமிகள்
79. பி. சங்கரன் பிள்ளை
80. அ. இ. இளையபெருமாள் பிள்ளை
81. ஆ. இராமலிங்கம் பிள்ளை
82. ஆர். வேங்கடாசலம் பிள்ளை
83. தக்ஷிணாமூர்த்தி பிள்ளை
84. மு. அ. பெரும்படையான் பிள்ளை
85. அ. நாறும்பூநாத தேசிகர்
86. வி. எம். கல்யாணசுந்தரம் பிள்ளை
87. பி. கே. சுப்பிரமணிய பிள்ளை
88. டி. வி. உமாமஹேஸ்வரம் பிள்ளை
89. அ. சிதம்பரம் பிள்ளை
90. வ. திருவரங்கம் பிள்ளை

## மேற்கூறிய பெரியார்கள் கீழ்வரும் சபைகளின் பிரதிநிதிகளாக வந்தனர் :—

1. சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை
2. தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம், திருநெல்வேலி
3. சைவசபை, பாளயங்கோட்டை
4. சைவசித்தாந்த சபை, தூத்துக்குடி
5. ௸ திரிசிராப்பள்ளி
6. ௸ ஸ்ரீவில்லிபுத்தூர்
7. ௸ பத்தமடை
8. சைவசித்தாந்த சங்கம், பூவாளூர்
9. ௸ குலசேகரன் பட்டணம்
10. சைவசித்தாந்த கழகம், சங்கரன் கோயில்
11. ௸ திருநெல்வேலி
12. சைவப்பிரகாசசபை, கோயமுத்தூர்
13. ௸ விருதுநகர்
14. சித்தாந்தப் பிரகாசசபை, சென்னை
15. சைவபரிபாலன சபை, சென்னை
16. திருநெறித் தொண்டர் குழாம், தென் திருவிதாங்கூர்



...ர் குழாம்

...ழகம், முடி

...பட்டி

20. சிவாலய பணிவிடைச் சங்கம், கோவிற்பட்டி
21. கவேச பக்தஜனசபை, வல்லநாடு
22. சித்திவிநாயகர் சபை, ஓட்டப்பிடாரம்
23. பாலசுப்பிரமணிய பக்தஜனசபை, இராயப்பேட்டை, சென்னை
24. செந்திலாதிபன் திருவருட் கழகம், செந்தில்
25. நால்வர் திருச்சபை, சிவகங்கை
26. திருஞான சம்பந்தர் திருவருட் கழகம், பேட்டை
27. திருஞான சம்பந்தர் பஜனை சபை
28. திருஞான சம்பந்தர் சபை, மஞ்சக்கொல்லை
29. திருவள்ளுவர் கழகம், தென்காசி
30. ௸ வீரவநல்லூர்
31. அறத்திரு நெறிக்கழகம், சிந்தாபூந்துறை
32. பொதுஜன ஊழிய சங்கம், ஆதம்பாக்கம்,

## பல காரணங்களால் கூட்டத்துக்கு வர முடியாமையால் தங்கள் கருத்துக்கள், ஆதரவு, பற்று, பொருளுதவி முதலியன வழங்கிய பெரியார்களும் சபைகளும்

1. உயர்திரு. ஞானியார் சுவாமிகள், ஆரணி
2. „ மறைமலையடிகள், பல்லாவரம்
3. சர். டி. என். சிவஞானம்பிள்ளையவர்கள், பாளயங்கோட்டை
4. திரு. டி. இலக்குமணப் பிள்ளையவர்கள், திருவனந்தபுரம்
5. இலக்கண விளக்கவாசிரியர் பரம்பரை திரு. சோமசுந்தரதேசிகர், திருவாரூர்
6. திரு. கு. சோமசுந்தர தேசிகர், திருவையாறு
7. திரு. வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர், கோவமுத்தூர்
8. திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார், கோயமுத்தூர்
9. திரு. சி. எம். இராமச்சந்திர செட்டியார், கோயமுத்தூர்
10. பாவி. சு. நெல்லையப்பர், சென்னை
11. வை. கந்தசாமி முதலியார், திருப்பாதிரிப்புலியூர்
12. டி. நல்லசிவன் பிள்ளை, சென்னை
13. திரு. கோ. வரதராஜ பிள்ளை, தில்லையாடி
14. வா. இராமலிங்கம்பிள்ளை, பேட்டை
15. ஏ. நடேசப்பிள்ளை, மாயவரம்
16. பி. அளசிங்கம், சென்னை
17. தி. க. உலகநாதப்பிள்ளை, திருநெல்வேலி
18. சி. வ. நல்லப்பெருமாள் பிள்ளை, தூத்துக்குடி
19. வைதிக சைவசம்மேளனம், திருநெல்வேலி
20. ஸ்ரீ சண்முகானந்த சன்மார்க்க சங்கம் திருமருகல்

187130

# மதிப்புரைகள்

**திருப்போரூர் சந்நிதிமுறைத் திரட்டும் அரும்பத வுரையும்.**—இதில் அருமையான பாடல்கள் அரும்பத வுரையுடன் திரு. மா. துரைசாமி முதலியார் அவர்களால் திரட்டப்பட்டுள்ளன. தினந்தோறும் போரூர் முருகனை வழிபடுவோர் உபயோகிப்பதற்குரிய சிறந்த நூல். மிக அழகாக அச்சிடப்பட்டுள்ளது. வேண்டுவோர்: சென்னை இராயப்பேட்டை, முருகவேள் புத்தகசாலைக்கு 6 அணா தபால் பில்லைகள் அனுப்பிப் பெறுக.

**திருவாசக உண்மை, சுத்த சாதகம், உண்மை முத்திநிலை.**—இந்நூல்களின் புதிய பதிப்பு புதுவை நந்தி வெளியீட்டு மன்றத்தவரால் பதிப்பிக்கப் பட்டுளது. இவைகளைப் பற்றி சென்ற ஆண்டு "சித்தாந்தம்" மார்ச்சு இதழில் வெளிவந்த மதிப்புரையை ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

**திருக்குறள் (பொழிப்புரையுடன்).**—திருக்குறள் எத்தனை பேரறிஞர்கள் எத்தனை அதிகம் வெளியிட்டாலும் அத்தனை அதிகம் அவர்கட்கு நமது நன்றியுரித்து. இந்நூல் திரு. கி. வீரராகவன் இயற்றிய பொழிப்புரையுடன் காஞ்சீபுரம் தமிழ் நூற்பதிப்புக் கழகத்தாரால் அச்சிடப்பட்டுள்ளது. விலை அணா எட்டு. ஒவ்வொரு தமிழ்மொழிப் பற்றுடையாரும் வாங்குவது அவசியம்.

**அருணசல மகாத்மிய வசனம்.**—இது திருவண்ணாமலை ஸ்ரீமத் ஈசுவர சுவாமிகளால் இயற்றப்பட்டது. விபூதி உருத்திராக்க மகிமை முதலிய பல அரிய பகுதிகள் இதன்பால் உள. பல அழகான படங்களும் உள. சுலபமான நடை. விலை அணா 12. வேண்டுவோர் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணிய வாணி புத்தகாலயத்துக்கு எழுதுக.

**"இளந் தமிழன்."**—இது தூத்துக்குடியினின்றும் வெளிவரும் அரிய மாதப் பத்திரிகை. ஆசிரியர்: திரு. ந. சோமயாஜுலு. தமிழ்மொழி ஆர்வமும், வீரர் சரித்திரங்களும், தமிழ் இளைஞர் கவனித்தற்குரிய பல அறங்களும் இதில் மிளிர்கின்றன. ஒவ்வொரு இளந் தமிழனும் இவ் "இளந் தமிழனை" ஆதரிக்க வேண்டும். வருட சந்தா ரூ. 4.

**"சைவப் பஞ்சாங்கம்."**—சுக்ல வருஷ வாக்ய சைவப் பஞ்சாங்கம் ஒன்று கிடைக்கப் பெற்றோம். பெரிதும் சைவமுறைப்பற்றி ஆக்கப்பெற்ற இப் பஞ்சாங்கம் அனைவரிடத்தும் சிறப்பாக ஒவ்வொரு சைவரிடத்தும் இருத்தல் அவசியம். கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை அணா 2. விலாசம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், நெ. 6, பவழக்காரத் தெரு, சென்னை.

---

# திருவிழாவில் சமயபோதனை.

சென்றமாதம் திருமயிலாப்பூரில் நடந்த திருவிழாவில் மூன்று தினங்களில் நம் சமாஜத்தினர் பெருங் கூட்டங்கள் நடத்திச் சமயபோதனை செய்தனர். இரதோத்ஸவ தினத்தன்று (22-3-29) திரு. கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் "திருஞானசம்பந்தர் மாண்பு" என்பதுபற்றி விரிவாகப்பேசி, சமணர்கள் கழுவேறிய சரித்திரம் முதலியவைகளைப் பற்றிச் சிலர் கூறும் குறைபாடுகளைப் பரிசோதித்துத் தகுந்த விடைகள் கூறினர். பின்னர் திரு - C. V. சிவஞானம் பிள்ளை யவர்கள் சுவாமிகள் அற்புதச் செயல்களைப்பற்றிப் பேசினர். பிறகு திருவாளர்கள் - ம. தங்கவேல் பிள்ளை, வல்லி. ப. தெய்வநாயக முதலியார், இ. கோவிந்தசாமி முதலியார், அ. சிவசங்கர முதலியார் அவர்கள் பேசினர். இறுதியில் திரு-ம. பாலசுப்பிரமணிய முதலியார் திருநீற்றின் சிறப்பை விளக்கி வந்தனம்கூறி கூட்டத்தை முடித்தனர்.

அடுத்தநாள் அறுபத்துமூவர் தினத்தன்று மாலை 5-15 மணிக்கு திரு-E. N. தணிகாசல முதலியார் B.A., B.L., "அறுபத்துமூன்று நாயன்மார்" சரித்திர உண்மையை மிக ஆர்வத்தோடு திருக்கோயிலில் திரண்டுவந்த பெருங்கூட்டத்திற்கு இனிது விளக்கினர். பிறகு திரு. வி. உலகநாத முதலியார் "அங்கம் பூம்பாவை" என்பதுபற்றி மயிலாப்பூரில் முன்காலத்தில் நடந்த அற்புதத்தின் உண்மையை விளக்கி, தற்காலத்தவர் கூறும் மறுப்புகட்குத் தகுந்த விடைகள் பகர்ந்தனர். சிதம்பர பாகவதர் ஒருவர் பேசியபின் காரியதரிசி வந்தனம்கூறி சபையை முடித்தனர்.

திருக்கல்யாண தினத்தன்று (25-3-29) மாலை 6-மணிக்கு திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் “பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாவள்” என்று சிவஞான சித்தியார் வாக்கைப் பீடிகையாகக்கொண்டு சக்தியின் இயல்பு, சிவம் சக்தியோடு கலந்துநிற்கும் தன்மை, சக்திவழிபாட்டின் நுட்பம், கோயில்களிற் கடவுளுக்கு நடக்கும் திருக்கல்யாணத்தின் உட்கருத்து முதலியவைகளைப்பற்றி மிக அரியதொரு விரிவுரை நிகழ்த்தினர். பிறகு திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் “வாயிலார் நாயனர்” சரித்திர நுட்பம், மானஸீக பூஜையின் சிறப்பு முதலியவைகளைப் பற்றிப் பேசினர். வந்தனத்துடன் கூட்டம் முடிந்தது. இக்கூட்டங்கள் நடைபெறுதற்குத் துணைசெய்த ஆலய தர்மகர்த்தாகட்கு நமது நன்றி உரித்தாகும்.

---


## சித்தாந்தம்

ஓர் உயர்ந்த மாதத் தமிழ்ப் பத்திரிகை

சந்தா விவரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுட்பட | உள் நாடு (இந்தியா, பர்மா, சிலோன்).... | ரூ. | 1 | 8 | 0 |
| | வெளி நாடு .... .... | ,, | 2 | 0 | 0 |

மலர் க - அழகான முழுகலிக்கோ பயிண்டு செய்தது ரூ. 2-0-0. (தபால்கூலி பிரத்தியேகம்.

குறிப்பு :—ஓராண்டிற்குக் குறைந்த சந்தா கிடையாது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விளம்பர விகிதம் | முழுப் பக்கம் | ரூ. | 10 | 0 | 0 |
| | அரைப் பக்கம் | ,, | 5 | 0 | 0 |
| | கால் பக்கம் | ,, | 3 | 0 | 0 |

சித்தாந்தம் ஆபீஸ்,
88, திருப்பள்ளி தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.


---


## செந்தமிழ்ச் செல்வி 7-வது ஆண்டு

இஃது ஓர் உயர்ந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை
10-2-29 முதல் வெளிவருகின்றது

இதன்கண் தமிழ் இலக்கணம், இலக்கியம், மொழியாராய்ச்சி, சைவசமயம், பிறசமயங்கள், புராணம், இதிகாசம், திருமுறை, நுண்ணூல்க (Sciences) ளின் சாரம், வைத்தியம், சோதிடம், தமிழ் நூல்களின் வரலாறு, இசைநூல், தமிழ்ப் புலவர் வரலாறு, பிற பத்திரிகைகளிலுள்ள அரிய கட்டுரைகளின் சாரம், தமிழ் நூல்களில் அறிஞர்கட்கு நிகழும் ஐயவினாக்கள், அவற்றிற்கு விடைகள், புதுக்கதைகள் (Novels), நாடகங்கள், வியப்பு மொழிகள், (Wits and Humours) உவகை மொழிகள், தமிழும் சமயமும் பற்றிய சீர்திருத்தங்களைக் குறித்த அறிவுரைகள், திருவுருவப் படங்கள் முதலியன வெளிவரும்.

இதன்கண் புறப்பொருள் கட்டுரைகள் விளக்கப் படங்களுடன் வெளிவருவது குறிப்பிடத் தக்கது.

இதற்குத் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A , M. L., திரு. பா. வே. மாணிக்க நாயக்கர், B. E., திரு. S. அனவரத விநாயகம் பிள்ளை, M. A., L T.. திரு. நா. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. க. ப. சந்தோஷம், B. A., L. T., மணி. திருநாவுக்கரசு முதலியார் முதலிய தமிழ்ப் பேரறிஞர்கள் கட்டுரை எழுதி வருகின்றனர்கள்.

ஆண்டுக் கையொப்ப விபரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 | மாணவர்கட்கும், தமிழ்ப் பண்டிதர் |
| வெளி நாடு | ரூ. | 4 | 8 | 0 | கட்கும், பங்காளிகளுக்கும் ரூ. 3 8 0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 2½ அணு தபாற்தலை யனுப்புக.

முதல் 6 பைண்டுத் தொகுதிகளுக்கும் மொத்தம் விலை. ரூ. 20 0 0.

‘செந்தமிழ்ச் செல்வி’ நிலையம், 6, பவழக்காரத் தெரு, சென்னை.


---


Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.